தென்மொழி

வெட்கப் படுவதே நல்லது; அதனினும்
துட்கென உயிரைத் துறப்பதும் நல்லதே!

உலகெலாம் பரவிய உயிர்தமிழ் இனத்
நலமெலாம் மீட்கவும் நல்லரசு ஒன்றைத்
தமிழீ ழத்தில் தழையச் செய்யவும்,
இமிழாத விழியனாய்—இளைக்காத நெஞ்சனாய்—
ஆர்க்கும் புலியென அன்றன்றும் புதுப் புதுப்
போர்க்களம் காணும் புரட்சி வேந்தனாய்ப்
பீடுற நிற்கும் பிரபா கரனை—
ஈடிலா மறவனை—எம்மினத் தலைவனை—
இனத்தோன்றல் ஒருவனை—எச்சில் சோற்றுக்கு
மனச் சான்றைத் தின்ற மாகொடி யன்கள்
காட்டிக் கொடுக்கும் கயமையை என்னென்போம்?
கூட்டிக் கொடுக்கும் குடல்நிரப் பிகளே!
நமரின் நலம்பெற நனிவிரும் பாத
குமரி அனந்தக் கோடரிக் காம்புகளே!
பதவியும் பணமும் பல்லிளிப் புக்கே
உதவியாய் வருமெனில் உருகி நின்றே
கயிறு திரிப்பதே வாழ்க்கையாய்க் கருதி
வயிறு பிழைக்கும் வாழப்பா டிகளே!
மண்டிய அடிமை மயக்க உணர்வின்
திண்டி வனத்தின் இராமமூர்த் திகளே!
'போபர்சு' புகழ் இராசீவ் புளுகனை
மாபெரும் தலைவனாய் மதித்து வணங்கும்
மூப்பனார் போலும் மூங்கை உடல்களே!
ஆப்பினை அசைத்த அழிகுரங் குகளாய்ப்
பார்ப்பனச் செல்வியின் பாதத்தில் வீழ்ந்தே
ஊர்ப்பணக் கொள்ளைக்கு அமைச்சராய் ஒழுகி
எட்டி உதைக்க எங்கேயோ கிடக்கும்
மட்டிவீ ரப்ப இராசாரா மன்களே!
நீங்கள் அனைவரும் நெடுந்தமிழ் மரபின்
ஓங்கிய பிறவியைத் தாங்கிய தற்கே
வெட்கப் படுவதே நல்லது; அதனினும்
துட்கென உயிரைத் துறப்பதும் நல்லதே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 7

விலை:
உருபா: 3-00

நமக்கு வந்த மடல்கள்.

O: 1493: உயர்திரு ஐயா அவர்கட்கு வணக்கம். நான் தாங்கள் சிறப்பாகச் செய்து முடித்த ''திருக்குறள் தொடர் சொற்பொழிவு'' நிகழ்ச்சிப் பதிவைச் செவியுறும் நல்லூழ் பெற்றேன். அத்தகு நிகழ்ச்சி தாங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் அஃதாவது 82-ஆம் ஆண்டு பவானியில் செய்யப்பட்ட பேருரையாக இருப்பினும், அத்தகு நிகழ்ச்சியின் முழு நாடாக்கள் இப்போதுதான் எனக்குக் கிடைக்கப் பெற்று அதன் சுவையை உணர்ந்தேன்.

உண்மையிலேயே இதுநாள் வரை புரட்டியே பார்க்காமல், எண்ணியே இராமல் இருந்த ஓர் ஒப்பற்ற தமிழ்க் களஞ்சியத்தை அறியாமல் இருந்தேனே என எண்ணி வெட்கப்பட்டேன். என்னிடம் இருந்த தெளிவுரையைக் கொண்டு விரைவு விரைவாகப் புரட்டினேன். எத்தனை முரண்பாடுகள்!

ஐயா, நான் ஆர்வமாய் அறிந்து கொள்ளத் துடிக்கும் தெளிவுரைக்குத் தாங்கள்தான் அருள் கூர்ந்து உதவ வேண்டும்.

ஏனென்றால் அத்தகு நிகழ்ச்சியின் போது தாங்கள் உண்மையான, சரியான, ஆராய்ச்சி முழுமையான விளக்கவுரை அணியம் செய்து வருவதாகக் கூறியுள்ளீர்கள். அஃது உறுதியாக இந்தக் கால இடை வெளியில் நிறைவு பெற்றிருக்கும் என்ற மிக்க ஆர்வத்துடன் வேண்டுகிறேன். தங்களின் அந்தப் புனிதமான பணி நிறைவு பெற்று அச்சில் வெளிவந்திருக்கும் என மிக நம்பிக்கையுடன் எதிர் நோக்குகின்றேன். அப்படி அந்தப் பாதுகாப்பான, அனைவரும் அறிய வேண்டிய அத்தகு அரிய நூல் வெளிவந்திருந்தால் எந்தப் பதிப்பகத்தில் அச்சேறியுள்ளது— என்பதனைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தங்களின் விடை கிடைக்கப் பெற்றால் தங்களிடம் நேரிலேயே வந்து பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆர்வமுடன் தங்களைக் காண விரும்பும் அன்பு, —ந. குமார்.
பனப்பாக்கம், 631052

O: 1494; போற்றுதலுக்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு! வணக்கம். தாங்கள் எம் (மேலைச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க்) கல்லூரிக்கு வந்து சென்றதிலிருந்து, இது காறும் மடல் எழுதாமைக்கு மன்னிக்கவும். கல்லூரிப் பணிச்சுமை மற்றும் தேர்வுப் பணிகளால் உடன் மடல் எழுத இயலவில்லை. எங்கள் அழைப்பை ஏற்றுத் தங்களின் பல்வேறு பணிகளுக்கிடையில், உடல் நலம் கருதாது, வந்து சென்றதைப் பெரிதாகக் கருதுகிறேன். தொடர்ந்து ஈர் இரவுப் பொழுதுகளைப் பயணத்தில் கழிக்க வேண்டியதாயிருந்தது. தாங்கள் எம் கல்லூரியில் ஆற்றிய பேருரையினை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மறுநாள் மிகவும் போற்றியுரைத்தனர். வெற்றுச் சொல் விரவாத தனித் தமிழில், ஆற்றொழுக்காய் அமைந்த, தங்களின் சீருரை எம் மாணவர்களுக்கு, ஏன், ஆசிரியர்களுக்கும் பெரும் வியப்பாய் அமைந்தது. 'இது போன்றதொரு தரமான சொற்பொழிவை, நான் இதுவரை கேட்டதில்லை' என எம் கல்லூரி ஆங்கிலப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(திருவளம் தி. பி. 1990 (1959))

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் முழக்கம், நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுழக்கம், நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26] தி பி. உ0உங — இரட்டை (துலை 92) (ஓலை:7]

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-8

அவ்வாறு வெளிவந்த செ.சொ.பி.யின் முதல் மடலம் கூட நாம் எதிர்பார்த்த அளவு மனநிறைவு தரும் வகையில் எழுதப் பெறவில்லை. அது பாவாணரின் குறைபாடோ, வெளியிட்டவரின் குறைபாடோ, தெரியவில்லை.

அதில் பற்பல குறைகள் இருந்தன. முதலில் அஃது ஒரு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியாக இல்லை. அஃதொரு பொருளகர முதலியாகவே இருந்தது. பொருளகர முதலிக்கும், சொற்பிறப்பியலகர முதலிக்கும் அடிப்படையிலேயே பல வேறுபாடுகள் உள்ளன. பொருளகர முதலியில் எல்லாச் சொற்களுக்கும் வழக்கியல் பொருள்கள் மட்டுமே குறிக்கப் பெற்றிருக்கும். சொற்பிறப்பியல் அகர முதலிக்கு மூலச் சொற்கள் அனைத்திற்கும், அவற்றுக்கான மூலச் சொற்களும், வேர்ச் சொற்களும் அவற்றின் பொருள்களும் வழக்குகளும் வடிவ மாற்றங்களும், இறுதியாக அச் சொற்கள் வேறு மொழிகளில் போய் வழங்குகின்ற வடிவங்களும் கொடுக்கப் பெற்றிருக்கும்.

தொடக்கத்தில் பாவாணர்க்கெனத் தென்மொழியில் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம்' அமைத்துக் கொடுப்பதற்கு முன், அவ் வகர முதலியில் சொற்கள் எவ்வாறு விளக்கம் பெறும் என்பதற்கு எடுத்துக் காட்டாக நாம் கேட்டுக் கொண்டதற் கிணங்க, அவரை, இஞ்சி, பதி, பொறு என்னும் நான்கு சொற்களுக்கும் அவர் விளக்கமும் விரிவான பொருளும் எழுதித் தந்ததை அன்பர்கள் சிலர் அக்கால் (தென்மொழி சுவடி 8, ஓலை 11, 12; சுவடி 9, ஓலைகள் 1, 2 ஆகிய இதழ்களில) பார்த்திருக்கலாம். அவ் வெடுத்துக் காட்டுகளில் வந்த உரைகள் போலவே செ.சொ.பி.யில் மூலச் சொற்களுக்குப் பொருள்கள் தரப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறின்றி, அவர் எழுதி வைத்ததாக, அவருக்குப்பின் வெளியிடப் பெற்ற செ.சொ.பி.யின் முதல் மடலத்தில், சொற் பிறப்பியலுக்கான எவ்வகைச் சிறப்புமின்றிப் பொதுவான முறையிலேயே சொற்களுக்குப் பொருள்கள் எழுதி நூல் வெளிவந்திருந்ததைக் கண்டு மிகவும் வருத்தமுற வேண்டியிருந்தது. அத்துடன் அவ் வகர முதலியின் முன்னுரையில், அந்நூல் வெளிவருவதற்காகத் தென்மொழியில் நாம் திட்டம் வகுத்தது பற்றியோ, அவ்வகையில் பாவாணர் தம் வாழ்க்கைக்கும். செ.சொ.பி. அகர முதலி நூல் வெளியீட்டிற்குமாக அவர் மறைவு வரையில், ஏறத்தாழ உருபா ஐம்பதினாயிரம் அளவில் நன்கொடை வந்து, அதை அவர் பெற்றுக் கொண்டது பற்றியோ, அந்நூலை வெளியிட்ட பேராசிரியர் ஒரு சிறு குறிப்புதானும் அதில் குறித்திருந்தாரல்லர். பணியமர்த்தத்திற்காகப் பாவாணர் அவர்களிடம் அப்பேராசிரியரை நாம் பரிந்துரைத்ததற்கான நன்றியறிதலை அவர் இவ்வாறு காட்டினாரோ என்று நாம் எண்ணி வருந்த வேண்டியிருந்தது.

பாவாணர் மறைவுக்குப் பின், அவர் தொடராது விட்டுச் சென்ற சொற்பிறப்பியல் அகர முதலித் துறையில் பல கோளாறுகள் நடந்தன. இதுபற்றியெல்லாம் பாவாணர் மறைவுக்குப் பின்னர் வந்த தென்மொழி நினைவிதழிலேயே (சுவடி: 17; ஓலை: 6-7-இல்) கீழ்வருமாறு எழுதியிருந்தோம்.

"பாவாணர் மறைவுக்குப்பின் அவர் தொடராது விட்டுச் சென்ற சொற்பிறப்பியல் அகர முதலியைப் பற்றிச் சிலர் மிக எளிதாகக் கருதுவது போல் தெரிகிறது. அதைப் பற்றிய முழு உண்மையை உணராதும், அதற்குத் தேவையான அடிப்படை அறிவைப் பற்றிச் சிந்தியாதும், அவர்கள் அதைத் தம்மாலும் செய்துவிட முடியும் என்று அளவிறந்து நினைப்பதாகவும் தெரிகிறது:

"எனவே, அவர்கள் ஆங்காங்குள்ள தென்மொழி அன்பர்களிடமும், பாவாணரை அறிவளவில் நன்கு அறியாதவர்களிடத்தும், அவ்வகரமுதலி பற்றி அடிப்படை உணராத அதிகாரிகளிடத்தும், அது பற்றி ஆழச் சிந்திக்காத அமைச்சர்களிடத்தும், தமக்கு அவ் வகர முதலிசெய்வதற்குப் போதிய தகுதியுண்டென்றும், பாவாணர் நம்மை அத்துறையில் பயிற்றுவித்திருக்கின்றார்

என்றும், இடைவிடாது பொய்யும் புளுகுமாகக் கூறி அவர்களை நம்பவைக்க முயற்சி செய்வதாகவும் கேள்வியுறுகின்றோம்.''

இனி, இவர் போலவே, இன்னோர் இலக்கியப் புலவர் பாவாணர் உயிருடன் இருந்த வரை, அவருடன் எவ்வகை நெருக்கமும் கொள்ளாதிருந்தும், தம்மைப் பற்றியும் தம் தகுதியைப் பற்றியும் எவ்விடத்தும் எவரிடத்தும் முன்மொழியப் பெறுமலிருந்தும், இதே செ.சொ.பி.பணிக்கு அக்கால் பாவாணர் வருந்தியழைத்த பொழுதெல்லாம், பொருள் வருவாய் ஒன்றே கருதி, தாம் ஏற்கனவே உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக விருந்து பெற்று வந்த சம்பளத்தினும், செ.சொ.பி. பணிக்கு வந்தால் தம் வருவாய் குறைந்து விடும் என்றும் கூறி வராமல் இருந்தவர், அவர் மறைவுக்குப் பின், அவருக்குத் தாமே அனைத்து-மாக இருந்தவர் போல் மிகைப்படுத்திக் கூறித் தாம் பாவாணர் தொண்டர்களிடம் மிக நன்மை பெற்று வருவதும், அவர் தம்மை 'இன்றைய பாவாணர்' என்று பிறர் அறியாமற் கூறி வருவதைத் தடுக்காமல் ஏற்றுக் கொள்வதும் கண்டிக்கத் தக்கனவாகும். அத்துடன், ''வெறும் வருவாய்க்காகவும் பதவிக்-காவும் ஓர் அரிய வேலையைத் தாம் மேற் கொண்டதாகக் கூறப் பெறும் பெருமைக்காகவும், இப்படிப் பொய்யாகப் பேசியும் எழுதியும் வருவது, பாவாணரையும் அவர் அறிவாண்மையையும் நன்கு விளங்கிக் கொள்ளாததும், அவர்க்கே இரண்டகம் செய்வ-தும் ஆகும்.''

''சிறந்த மொழிநூலாசிரியராகிய பாவாணர்க்கே இஃதோர் அரிய பணியென்பதை அனைவரும் முதற்கண் உணர்தல் வேண்-டும். ஐந்தாண்டுகளில் நூல் முழுவதையும் முடிப்பதாகத் தொடக்கத்தில் கூறிய அவர், தென்மொழித் திட்ட மூன்றாண்டும், அரசுத் திட்ட ஏழாண்டும் அடங்கிய பத்தாண்டுக் காலத்திலும், நூலின் பத்தொன்பதில் ஒரு பங்கினையே செய்ய முடிந்தது என்-பதை அன்பர்களும், அறிஞர்களும், அதிகாரிகளும், அரசும் நன்-றாக எண்ணிப் பார்த்தல் வேண்டும். 'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்' என்னும் வாய்மையுரை, பாவாணர் வாழ்விலும் மெய்யாகி நிற்கையில், மொழிநூலாய்வில் ஒரு முழந்தானும் நீந்தத் தெரியாத இவர்கள், முழுக் கடலும் வெறுங்கையாலேயே நீந்திக் கடப்போம் என்பது பேதைத் தனமானதும், பிள்ளைத் தனமானதும் ஆகும்.''

இவ்வகையில் பலவாறாக நாம் பாவாணரின் சொல்லாய்வு, அகர முதலி ஆக்கம் ஆகியவை கருதிக் கூறிய கருத்துகள் என்றுமே தமிழ்வளர்ச்சிக்கு வழிகாட்டாகக் கருதப் பெற வேண்-டிய கருத்துகளாகும். அத்துடன் அவ்வறிக்கையின் இறுதியில் நாம் இவ்வாறாகக் கூறியிருந்தோம்:

''இனி, பாவாணரோடு, சொற்பிறப்பியலறிவே அடியோடு போய்விட்டதென்று எவரும் கருதிவிட வேண்டா: அது பாவாணரிலிருந்துதான் தொடங்குகிறது என்றும், இனிமேல்-தான் அது வளர்ச்சியுறும் என்றும், எதிர் காலத்தில் அது நல்ல

படிநிலை வளர்ச்சி பெற்று உறுதியாக மலர்ந்து மணம் பரப்பும் என்றும், அதுவன்றி, நம் தேவைக்கென இன்றே அதைத் திடு-மென மலரச் செய்து விட வியலாது—அது கூடவும் கூடாது—என்றும் அவ்வழிக் கவலும் அறிஞர்கள் உணர்ந்து கொள்க.''

இவ்வாறு நாம் கூறிய நம்பிக்கை வீண்போகவில்லை என்பது சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின் மொழியியல் முயற்சியி-னின்று தெரிகிறது. அருளியார் பாவாணரைப் போல் இயற்கையி லேயே நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர்; நுண்ணறிவுத் திறன் மிக்கவர்; அதுமட்டுமன்றி அறிவுப் புலன் மிக்கவருக்கு இயல்பாக இருக்க வேண்டிய உழைப்பூக்கம் கொண்டவர்; சீரிய சிந்தனையும் நேரிய நல்லுணர்வும் கூரிய ஆய்வு நோக்கும் கொண்டவர்: இவற்றுடன் பாவாணர் மொழிநூலாசிரியர்க்குத் தேவையானவை என்று கூறும் (தென்மொழி. சுவடி: 17; ஓலை,6-7 —பக்கம் 68) நுண்ணியல்புகள், அறிவுத் திறன்கள் அனைத்தும் இயற்கையாகவே முழுமையாகப் பெற்றிருப்பவர் அருளியார் அவர்கள். இதை வெறும் உணர்வெழுச்சியாலோ, உறவுணர்வி-னாலோ, அவர் மேல் கொண்ட பரிவினாலோ நாம் கூறிவிடவில்லை; அவ்வாறு அருளியாரை மட்டுமன்று; வேறுயாரையுமோ கூட கூற மாட்டோம். முழுக்க முழுக்க அருளியாரின் தகுதியையும், திற-மையையும், அறிவு வெளிப்பாட்டையும் ஆய்ந்து மதிப்பிட்டே நடுவு நிலையுடன் அவ்வாறு கூறுகிறோம்; சுருங்கச் சொன்னால் அவர் போல் ஒரு மொழியியல் பேரறிஞரை இக்கால் காண்பது இயலாது: இனியும் அப்படி ஒருவர் தோன்றுவாரா என்பது ஐயமே! இன்னும்வெளிப்படையாகவும் உண்மையாகவும் கூறுவ-தானால், பாவாணரை விட அருளியார் அவர்கள் பல நிலைகளில் கூர்மையான மொழித்திறன் வாய்ந்தவர் என்பது ஒரு சிறு அளவுதானும் மிகையான கூற்றன்று.

நாம் ஏன் பாவாணரையும், அவருக்கு அடுத்து அருளியாரை-யும், மொழியாய்வு—சொல்லாய்வுத் துறையில் இவ்வாறு தலை-மேல் வைத்துப் பாராட்ட வேண்டியிருக்கிறதென்றால், பார்ப்ப-னீயம் இந்த மொழித்துறையில்தான் தன் காலை அகல விரித்து, வானத்துக்கும், நிலத்துக்கும் பரப்பி உட்கார்ந்து கொண்டு கிடக்கிறது. எதற்கெடுத்தாலும் சமசுக்கிருதம்தான் அதற்கு மூலம். தெளிவாகவும், வெளிப்படையாகவும் சொன்னால் பொது-வுடைமை நாடாகிய உருசிய நாடும், முதலாளிய நாடாகிய அமெரிக்காவும், மற்றும் கிரீக்கும், இலத்தீனும் கூட சமசுக்கிருத மொழிக்கு ஆட்பட்ட நாடுகளாக, மொழிகளாக இருப்பதைப் பார்த்து நாம் வருந்த வேண்டியுள்ளது. ஏனெனில் ஆரியர் அங்கிருந்த பொழுதெல்லாம் சமசுக்கிருதம் என்று ஒரு மொழியே தோன்றவில்லை. அப்படியானால் கிரீக்கும், இலத்தீனும், உருசிய-மும் ஆங்கிலமும் எவ்வாறு சமசுக்கிருதச் சொற்களைக் கொண்டிருக்கின்றன என்றால், அங்கு, சமசுக்கிருத சொற்களாகக் கருதப் பெறும் சொற்கள் சமசுகிருதத்திற்கும் மூலமான தமிழ்ச் சொற்களே ஆகும் என்பதைப் பாவாணரும் அவருக்குப் பின்னர்

இன்றைய நிலையில் அருளியுந்தாம் துல்லியமாக மெய்ப்பித்துக் காட்டும் மதுமையும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்களைத் தவிர இப்பணியில் ஆர்வம் உடையவர்களோ, அறிவுடையவர்களோ வேறு எவருமே இலர். அப்படி யாராவது எங்காவது இருப்பின், அவர்களும் தமிழண்ணல்களாகவோ, வையாபுரிகளாவோ, தெ.பொ.மீ.க்களாகவோ. இரா.பி.சேதுக்களாகவோ தாம் இருப்பார்கள்; இருக்க முடியும். ஏனென்றால் பார்ப்பனர்கள் அத்துணை வலிவுள்ளவர்கள்; வஞ்சகமுள்ளவர்கள்; சூழ்ச்சிக்காரர்கள்; ஆள்பிடிக்கும் கரவாண்மையில் அவர்களுக்கு அவர்களே நிகரானவர்கள். இவர்களுக்கெல்லாம் மசியாதவர்களே, மயங்காதவர்களே பாவாணர்களாகவும், அருளிகளாகவும் வடிவெடுத்து வெளிவந்து தனிநின்று, எந்தமிழ் மொழிக்கு உயிராகவும் ஊற்றமாகவும் நின்று இயங்குகின்றனர். பார்ப்பனீய ஆணிவேரான சமசுக்கிருதத்திற்கு மூலமே தமிழ்தான் என்பதை நிலைநாட்டி வருகின்றனர். இத்தகைய வரலாற்று நுட்ப திட்பங்களெல்லாம் பார்ப்பனர்களிடம் போய் மண்டியிட்டுக் கையேந்திப் பொறுக்கித் தின்று கொண்டு, பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்குப் பல்லிளித்துக் கிடக்கும் பிரகலாதப் பேராசிரியர்களுக்கு எங்கே தெரியப் போகிறது.?

பார்ப்பனர்கள் சிறு சிறு நிலைகளிலெல்லாம் கூட நன்கு கவனம் செலுத்தி, எந்த அளவுக்குத் தமிழைக் கெடுத்துக் கொண்டும், தமிழுணர்வை அழித்துக் கொண்டும் வருகின்றனர் என்பதற்கு மிக அண்மையிலிருந்து ஓர் எடுத்துக்காட்டைத் தருகிறோம்.

'இந்திரா பார்த்தசாரதி' என்னும் பச்சைப் பார்ப்பனீய வெறியர் ஒருவர் கடந்த சில மாதங்களாக 'தினமணி' என்னும் பச்சைப் பார்ப்பன நாளிதழில், அவ்வப்பொழுது தமிழுக்கு இறக்கமாகவும், சமசுக்கிருதத்திற்கு ஏற்றமாகவும், தமிழர்களுக்குத் தலைக்குனிவாகவும், ஆரியப் பார்ப்பனர்களுக்குத் தலை நிமிர்வாகவும் குடுமியைச் சிலிர்ப்பிக் கொண்டும், பூணூலை உருவிக் கொண்டும் எழுதி வரும் கட்டுரைகளை அன்பர்கள் பலரும் அம்மணமாகப் படித்திருக்கலாம்.

அத்தகைய கட்டுரைகளுள் கடந்த 13-5 92-இல் வெளிவந்த ஒரு கட்டுரையை அவர் இவ்வாறு தொடங்கியிருந்தார்.

"Intellectual என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழாக்கம் என்ன?

'அறிவு ஜீவி' என்ற என்ற சொல் வழக்காற்றில் இருக்கிறது. தூய தமிழில் சொல்ல வேண்டுமானால் அறிவு 'சீவி'—என்பது இந்திரா பார்த்த சாரதியின் எழுத்து!

இதில் அவரின் தலைக் கொழுப்பு எத்தனைத் தடிப்பானது என்பதை வெளிப்படுத்தியிருப்பதைப் பாருங்கள்: 'Intellectual என்பதற்கு 'அறிவு ஜீவி' என்பது தமிழாக்கமாம்! அதைத் தூய தமிழில் சொல்ல வேண்டுமானால் 'அறிவு சீவி' என்று சொல்ல வேண்டுமாம்! எத்துணை கிண்டல்! எள்ளல்! இகழ்ச்சி! 'ஜீவி' என்-

பது வடமொழியானால், 'சீவி' என்பது தூய தமிழாகி விடுமா? இப்படித் தமிழ் மொழியைத் தாழ்த்திப் பேசுகிறார். 'தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்று பாவேந்தர் பொங்கிப் பாடியதற்குப் பின்னர்தான் 'இந்திரா பார்த்தசாரதி-கள்' இவ்வாறு எழுதித் தமிழ்மேல் உள்ள தங்களின் எரிச்சல் தினவை ஆற்றிக்கொள்கின்றனர் எனில் பார்த்துக் கொள்ளுங்களேன்! இன்னும் பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு பரவாதிருந்தால் என்னமாதிரி இழித்துப் பழித்துப் பேசுவார்களோ தெரியவில்லை.

இந்த அளவுக்கு நாம் அவர்களை என்றுமே இறக்கிப் பேசியது கிடையாது. நடமாடாத 'மனிதனை' 'நடமாடும் தெய்வம்' என்றும், 'மனிதப் புழுக்களை' 'மனிதக் கடவுள்' என்றும் முழு முட்டாள் தனமாக ஒரு பார்ப்பனக் கிழவரை இவர்கள் எல்லாருக்கும் அறிமுகம் செய்து வைப்பதும், அவரை அனைவரையும் வணங்கும்படி தூண்டிவிடுவதுமான வலக்காரத்தைக் கூட நாம் அறிவு அடிப்படையில் கண்டித்திருக்கிறோமே தவிர, கிண்டலாகவோ, இழிவாகவோ எள்ளல் செய்ததில்லை; இகழ்ச்சி பேசியதில்லை —என்பதை இந்திரா பார்த்தசாரதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறாக, நம் எதிரிகள் தமிழின் மேல் புதிய கோணங்களில் தொடுத்து வருகின்ற தாக்கங்களை நாம் வெறும் நேரடியான எழுத்துரைகளால் மட்டும் கூறித் தடுத்தோ அழித்தோ விடமுடியாது. மேலும் இன்றைக்கு ஓர் இந்திரா பார்த்தசாரதி இவ்வகை எதிர்ப்பில் ஈடுபட்டால், நாளை ஒரு பார்த்தசாரதி இந்திரா வந்து இன்னும் வேறு ஒரு கோணத்தில் தமிழுக்குத் தாக்கத்தையும், சமசுக்கிருதத்திற்கு ஆக்கத்தையும் கொடுக்கலாம். அக்கால் அவ்வெதிர்ப்பைத் தட்டிக் கேட்கவும், தடுத்து நிறுத்தவும் நம் போல் ஒருவரோ, அருளிபோல் ஒருவரோ இல்லாமற் போகலாம். அதற்காகத்தான் நிலையான ஒரு தீர்வை—என்றென்றும் தமிழுக்குப் பாதுகாப்புத் தரும் ஆக்கங்களை—நாம் உருவாக்கியாதல் வேண்டும். அவற்றுள் இக்கால் அருளி செய்துவரும் தூயதமிழ் அகரமுதலிப் பணியும், கலைச் சொல் ஆக்கப் பணியும் ஒன்று என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். (தொடரும்)

சென்ற இதழில் ஒரு திருத்தம்!

சென்ற இதழ் சுவடி: 26, ஓலை: 6-இன் 'ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே' என்னும் அட்டையின் மூன்றாம் பாடலின் முதல் வரி, பெயர்த்து எழுதுவதில் பிழை நேர்ந்து அச்சாகியுள்ளதற்குப் பெரிதும் வருந்துகிறோம். அவ் வரியைக் கீழ்வருமாறு திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

நாடு நடு நிலையினராய்—ஞாயமொன்று
சொல்லுகின்றேன்; நயந்து கேட்பீர்!

—ஆசிரியர்.

தமிழன்பர்களுக்கு ஒரு நற்செய்தி!

பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்.

அவரின் அறுபதாண்டு நிறைவு (10-3-93) நாளன்று வெளிவர விருக்கிறது!

(அதுபற்றிய ஒரு விளக்கம்!)

நம் அருந்தமிழ் மொழியின்கண் தோன்றிய பெருந்தமிழ்ப் பேரற நூலாகிய திருக்குறள் ஒன்றுதான் உலகப் பெரு நூல்களை-யெல்லாம் ஆக்கத்திலும் நோக்கத்திலும் வெல்லுந் தரமிக்கது. அதற்கு ஒப்பதும் மிக்கதுமாகிய ஒரு பேரற நூல், வாழ்வியல் நூல், மெய்ப்பொருள் நூல், பொதுமை நூல், புதுமை நூல், காலத்தையும், இடத்தையும், பொருளையும், இனத்தையும் மதத்தையும் கடந்தும் வென்றும் நிற்கும் ஞாலம் முழுவதற்கு-மான ஒரு வாலறிவு நூல். மாந்த வெளிப்பாட்டிலேயே, அதன் வியப்புக்கும் பயப்புக்கும் உகந்ததும் உரியதும் அரியதுமாகிய ஓர் உறுதுணை நூல்—இன்று காறும் தோன்றவில்லை என்பது ஒரு-தலை உறுதி. இது வெறும் பேருணர்வும் பேரவாவும் கொண்டு கூறும் வறிய கூற்றன்று; பேரறிவும் மாந்தப் பெரு நோக்கமும் கொண்டு கூறும் பேருண்மைக் கூற்றே ஆகும்.

அழிவற்ற இவ் வரும்பெரும் நூலுக்கு இன்றுகாறும் நூற்றுக் கணக்கான உரைகள், அது தோன்றிய நம் அறத்தமிழ் மொழி-யிலும் அண்டை அயல் மொழிகளிலும் தோன்றித் துலங்கி மூல நூலுக்கு உயிர்ப்பும் செழிப்பும் சிறப்பும் பரப்பும் உய்வும் பயில்வும் ஊட்டி வருகின்றன. திருக்குறள் போல் உலகில் தோன்றிய வேறு எம்மொழி நூலுக்கும், எவ்வற நூலுக்கும் இப் பலர் பால் உரைப் பேறு வாய்த்தில்லை என்று வலிந்தும் துணிந்தும் கூறலாம்.

ஆயினும் இந் நூலுக்கு இன்று வரை வெளிவந்த—எம் கண்-களில் பட்ட நூலுரைகள் யாவும், அந் நூலின் கருப் பொருளுக்-கும் திருப்பொலிவிற்கும், அஃகியகன்ற அறிவுச் செறிவிற்கும், உணர்வுத் திணர்வுக்கும் மெய்ப்பொருளுக்கும், உய்ப்பருளுக்-கும் ஏற்றவாறு செய்யப் பட்டுள்ளனவோ எனில், எம்மைப் பொறுத்த அளவினும் எம் சிற்றறிவிற்கு எட்டிய உணர்வினும் இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

இது பற்றியெல்லாம், கடந்த அரசியல் இருட்காலமாகிய 1975-76-இல் யாம் சிறைப் படுத்தப் பெற்று, ஓராண்டு சென்னை, நடுவண் சிறையுள் வைக்கப்பற்றிருந்த பொழுது, தீவிரமாகச் சிந்திக்கவும், அதன் வழித் தக்கவொரு தீர்வுக்கெம்மைக் கொளுவிக்கவும் வேண்டியிருந்தது.

இவ் வகையில், எம் விழித்திறவுக்கு மொழிப் புலங் காட்டிய, விழுப்பெருந்தோன்றல் தமிழ்ப் பேராசான் மொழி ஞாயிறு

பாவாணர் புலப்படுத்திய தமிழ் மரபுரையும் எமக்கு ஒரு சிறிதும் நிறைவளிக்கவில்லை யெனின் பிறர் பிற உரைகளெல்லாம் பற்றிக் கூறுதல் வறட் பாறைக் கண் வளந்தேடுதல் போன்றதே! சுருங்கக் கூறுமிடத்து, திருக்குறள்—பரிமேலழகர் உரையே ஒரு பொறுக்கு மணியாக உள்ளது எனலாம். ஆனால், அவரின் இன, மதக் காப்புணர்வாலும், தமிழறக் காழ்ப்பெரிவாலும் மூல விடங்களிலெல்லாம் பெய்து போகிய ஆரியப் பார்ப்பனீயச் சார்புரைகளால் அவர் பழிக்கப்பட வேண்டியவராக உள்ளாரே யன்றி அவர் கண்டு காட்டிய உரையூற்றம் இல்லாமற் போமாயின், திருக்குறள் மணியின் முழு ஒளிச் சிதறலேயும் உலகம் உணர்ந்திராது என்னும் உண்மையை யாரும் மறைத்தோ மறுத்தோ விடற்கியலாது. எனினும், பரிமேலழகர் உரையின் புரைகளைப் பாவாணர் காட்டிய பாங்கு போற்றுதற்குரியது; அது திருக்குறள் நோக்கிற்கே ஒரு திருப்பத்தைத் தந்தது. ஆயினும் அவரும் பெரும்பாலான விடங்களில் பரிமேலழகர் பதித்துச் சென்ற காலடிகளின் மேலேயே தம் காலடிகளையும் வைத்துச் சென்றுள்ளது யாவர்க்கும் எளிதே புலப்பட்டுவிடும் தன்மையதே.

பாவாணர்க்கு யாம் தந்த உரைப்பாயிரத்துள், 'அவர் உரைக்குப் பின்னரும் ஒருவர் உரையெழுதப் புகுவது நகைப்பிற்குரியதே' என்றோர் உறுதி கூறியிருந்ததும், பின்னர் யாம் மேலும் ஓர் உரை யெழுதத் துணிந்ததும், காலத்தால் நேர்ந்த கட்டாயக் கருத்து வெளிப்பாடுகளே! அவ் வெளிப்பாட்டிற்கும் அம் மெய்ப் பொருள் உணர்வே காரணியமாக அமைந்ததெனில், அது புனைவோ பொய்யோ ஆகாதென்க.

இனி, 1975-76-இல் எம் சிறையிருப்பின் பொழுது,' திருக்குறள் மெய்ப்பொருளுரை'யை, யாம் எழுதத் திட்டமிட்டபடி, அஃது ஏறத்தாழ ஐயாயிரம் பக்க அளவில் வருமென்பதும், அவ் விரிவும் விளக்கமும் பற்பல சிறப்பியல்களும் வாய்ந்த உரைக் கருத்துகளை அடிதாங்கி, ஏறத்தாழ ஐம்பதினாயிரம் குறிப்புகளும் நூற்சான்றுகளும் கொண்டிருக்குமென்பதும், அவற்றுக்குரிய ஆராய்ச்சிக் காலம் ஐந்தாண்டுகளும் ஆக்கக் காலம் ஐந்தாண்டுகளுமாக மொத்த உருவாக்கக் காலம் பத்தாண்டுகளாக இருக்கும் என்பதும், அக் காலத்தில், எமக்கு, உணர்வும், அறிவும், உழைப்பும், ஒரே நோக்கமும் இயற்கையிலேயே பொருந்திய ஓர் அணுக்கத் துணையாளர் இன்றியமையாத் தேவை என்பதும், அவரும் ஆண் துணையாக விருப்பின் பொருந்தாமற் போகுமாகலின், பெண் துணையே பொறையும், அமைவும், எண்ணச் சிதர்வின்மையும் கொண்டு, இயங்கத் தகுதியும் உடையதாக இருக்கும் என்பதால், அத்தகு துணை வாய்க்க வேண்டும் என்பதும், அஃதோர் இறைப் பேறாகத்தான் அமைய முடியும் என்பதும் பிற சிலவும் எண்ணி வகுத்துக் கொண்ட கோட்பாடாகும். அவ் வகையில் அக்காலே அம் முயற்சி தொடங்கி, ஏறத்தாழ பத்தாயிரம் குறிப்புகளும் எடுக்கப்பெற்று, பிற ஆய்வுகளிலும் தோய்ந்து, உரைப்பணி தொடர்ந்து நடந்து வந்தது.

யாம் ஏற்கனவே எடுத்துப் போட்டுக் கொண்ட இலக்கிய ஆக்கப் பணிகள், இதழ்ப் பணிகள், சொற்பொழிவுப் பணிகள், போராட்ட முயற்சிகள், நாட்டுப் பணிகள் முதலியவற்றுடன், திருக்குறள் மெய்ப்பொருளுரை எழுதுவதையும் ஒரு கூடுதல் பணியாகத் தோள்மேல் சுமந்து கொண்டதால், அம் முயற்சி இடையிடை மிகவும் மெதுவாகவே நடந்துவரலாயிற்று; தகுதுணை அமையக் காலமும் கருத வேண்டுவதாயிற்று.

இந் நிலையில் யாம் வேண்டியபடி, 1982 இறுதியில் நற்றுணையொன்றும் வாய்த்திடக் காலங் கைதர விருந்தது. ஆனால் எம் உயரிய நோக்கத்தை—அறிவியல் ஆக்கத்தை, உலகியல் நோக்கொடு வைத்துப் பொருத்திப் பார்த்த எம் வாழ்வியல் மனைத் துணையுறவுகள், இறையருளால் வரவிருந்த அவ் வினைத்துணையுறவுப் புதுமைக்கு ஏதமும் இழிவும் கற்பித்து, எதிரேறி நின்று, வாய்வழக்குச் சதிராடி, எம் உள்ள உணர்வுகளை நுறுங்கடித்து எம் ஆறிவையும் கிறங்க வைத்து, அச் சூழலையே கலைத்தழித்து விட்டன. அதன் தாக்கத்தில் மீண்டும் அப்பணி தொடங்கும் வாய்ப்பு உள்ளமுழுந்திப் போய்விட்டது.

ஆயினும், அவ்வுணர்வை அவ்வப்பொழுது சில நல்லுள்ளங்கள் நினைவூட்டி வந்தன. இறுதியில் கடந்த சூன் மாத இடையில் ஒரு நாள் இரவு முழுவதும் அந் நூலாக்க உணர்வு தன்னளவில் தானே கிளர்வு கொண்டு உள்ளத்தில் ஒரு பெரும் தாக்கத்தை உருவாக்கியது. அதன் விளைவாக அன்றைய விடியலில் ஒரு நன் முடிவுக்கு நாம் வந்தோம். அஃது இது:

''திருக்குறள் மெய்ப்பொருளுரை''யினை நாம் முதலில் திட்டமிட்டு வகுத்துக் கொண்டவாறு முழு அளவில் எழுதப் புகுவதானால், அதற்குரிய நேரமும் சூழலும் துணை வாய்ப்புகளும் இன்னும் வந்து நேரவில்லை. அவ்வாறு நேர்ந்து, காலமும் இடமும் பொருந்தி வரும் சூழல் எக்கால் அமையுமோ தெரியவில்லை: அப்படியே அமைந்தாலும், அப்பொழுது தொடங்கி அவ்வுரை முடிய ஏறத்தாழ பத்து ஆண்டுகள் ஆகலாம். அக்கால் இப்பொழுது அவ்வுரையை எதிர் பார்ப்பவர்கள் பலர் இல்லாமலும் போகலாம்; நம் நிலையும் என்னவாக இருக்குமென்றும் கூறுதற்கு இயலாது.''

''இவ்வாறான சூழலில் இக்கால் உள்ளவர்கள் ஓரளவு நிறைவு பெற, அதன் உரைச் சுருக்கத்தையேனும் எழுதி வெளியிட்டு விடலே நன்றாகும். அதன் விரிவுரை, விளக்கவுரை, சிறப்புரை, வுட்பவுரை போன்றவற்றைப் பிறகு எழுதி விடலாம். இச் சுருக்க நுரையையும் அடுத்து வரும் நம் அறுபதாண்டு நிறைவின் பொழுது நூல் வடிவில் வெளியிட்டு விடுதல் வேண்டும்'' என்பதாக முடிவு செய்தோம்.

அம் முடிவின் படி, உடனே அச் சுருக்கவுரையை எழுதத் தொடங்கி விட்டோம்; இதன் முதல் பத்து திருக்குறளுக்கான

(தொடர்ச்சி அடுத்த

'அந்தமான் முரசு' ஆசிரியர் சுப.சுப்பிரமணியம் மறைவு!

'அந்தமான் முரசு' என்னும் கிழமை இதழைக் கடந்த 24 ஆண்டுகளாக நடத்தி இதழாசிரியப் பணி புரிந்தவரும், 'தென்மொழி'யின் மேலும், ஆசிரியர் பாலும் ஆராப் பற்றும் மாறாத நட்பும் பூண்டவரும், ஆசிரியரைக் கடந்த 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அந்தமானுக்கு அழைத்து, அங்குள்ள போர்ட் பிளேயர், பகுல்தலா, இரங்கத்து, வெம்பர்லி கஞ்சு முதலிய தீவுகளில் எட்டு நாள்கள் சுற்றுச் செலவு செய்வித்து, ஆறு நிகழ்ச்சிகளிலும் கலந்துரையாடல்களிலும் பங்கு கொள்ளச் செய்து, அங்குள்ள தமிழ் மக்களிடை தமிழுணர்வும் தமிழின உணர்வும் பரவச் செய்தவரும், சிறந்த தமிழ்த் தொண்டரும், தமிழின முன்னேற்றத்தில் நீங்காத அக்கறையும் ஆர்வமும் கொண்டவரும், அந்தமான் தமிழர் சங்கச் செயலாளராகவும், தமிழ்க் கல்வி பாதுகாப்புக் குழுச் செயலாளராகவும், அங்குள்ள இலக்கிய மன்றங்களில் பங்கு பெற்றவரும், இறுதிவரை அந்தமானில் தென்மொழி பரவ வழி கோலியவரும், சிறந்த ஓமியோபதி மருத்துவரும் ஆகிய மதிதகு; சுப.சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 31-5-92 காலை 10 மணியளவில், அந்தமானில் இயற்கை எய்தினார் என்னும் செய்தி கேட்டு மிகுதுயர் கொண்டோம். திரு. சுப.சுப்பிரமணியம் அவர்களின் நீடு புகழ் நின்று விளங்கவும் அவர் ஆதன் அமைதியுறவும் தென்மொழி வாழ்த்தி வணங்குகிறது. அத்துடன் அவரின் எதிர்பாரா மறைவால் ஈடிலா இழப்பெய்திப் பெருந்துயரால் வாடும் அவரின் இன் துணைவியார்க்கும், மூன்று மகன்களுக்கும் நண்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. ○

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாதிரி உரைகள் அடுத்த தென்மொழி இதழில் வெளியிடப் பெறும். அவ்வுரை நூலாக வெளிவருதல் உடனே நிகழ வேண்டுவதாகலின், அதற்கு நிறைய பொருளும் தேவையாக இருக்கும். அதற்கு இவ்வுரை வெளிவருவதை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கும் நூற்றுக் கணக்கான உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் அருட்கொடை தந்து உதவலாம். அத்துடன் அந்நூல் முந்நூறிலிருந்து நானூறு பக்கங்களுக்குள் வரலாம் ஆகையாலும், அதற்கு உருபா ஐம்பது அளவில் விலை வரலாம் ஆகையாலும், நம் முந்தைய சில நூல்களுக்கு அமைத்த திட்டம் போல், இந்த உரை நூலையும் வாங்க விரும்பும் உள்ளங்கள் இன்றைய நிலையில் அதன் மதிப்பீட்டு விலையான உருபா ஐம்பதை முன் கூட்டி விடுத்தால், பின்னர் நூல்கள் நம் செலவிலேயே அனுப்பி வைக்கப் பெறும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். ○

நல்லன்பர்கள் உள்ளம் கொள்க!

15-6-92.
சென்னை-5.

அன்பு நிறை
பெருஞ்சித்திரனார்.

இம்மாதச் சிறப்பு மடல்:

பொதுத் தொண்டருக்கு அகவை ஏது?

செந்தமிழ்க் குன்றமாகிய தமிழரிமா, பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல, வாழ்த்தும் கூட. பெயருக்கேற்பப் பீடு குன்றாமல் வாழும் ஐயா!

தென்மொழி சுவடி: 26 ஓலை:6 இதழின் மூலம்தான் தாங்கள் அறுபதாண்டு இளைஞராக விளங்குகிறீர்கள் என அறிந்தேன். இந்த நேரத்தில் அன்னைத் தமிழால் ஆயிரம் முறை எமது அன்பான வாழ்த்துகளைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மேலும் நீங்கள் இன்னும் ஓர் அரை நூற்றாண்டுக் காலமாவது வாழ்ந்து, கயமை, காட்டிக் கொடுத்தல், காலை வாரல், காசுக்கொரு பேச்சு, பதவிக்கொரு புனைவு, கழிவு நீர்க் கால்வாயின் சேற்றைப் பூசிக் கொண்டு, சந்தனச் சாந்தாக மகிழும் மடமை, தன்மானமற்ற இழிதகைவமை, மொழி, இன உணர்வற்ற இழி நிலை, ஆகிய குப்பை, கூலங்கள் நிறைந்த வழிப் போக்கர்கள் தங்கிச் செல்லும் மடமாக உள்ள — இத் தமிழகத்தை, உங்கள் வீறு கொண்ட உணர்வாகிய துடைப்பத்தால், தூய்மைப்படுத்தி, நல்லவர்கள் வாழும் இல்லமாக ஆக்கவேண்டும் என்பது என் ஆசை.

ஐயா! உங்கள் வாழ்வில் அறுபது ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த அறுபது ஆண்டுகளில் உலக அளவிலும், நாடுகள் அளவிலும், மக்களின் அளவிலும் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருப்பீர்கள். தனி மாந்த வாழ்க்கையிலும் அவ்வாறே. ஆனால் தமிழனுடைய வாழ்விலும் முன்னேற்றம், வரலாற்று முன்னேற்றம், மற்றவர்களைவிட மேலானதாகக் கண்டிருப்பீர்களா என்பது ஐயமே. உங்களுக்கு அண்மையில் இருந்தவர்கள், அறிமுகமானவர்கள், வாழ்க்கை நிலையில் எவ்வாறெல்லாம் மாற்றம் அடைந்துள்ளார்கள் என்பதையும் அறிவீர்கள். எப்படியோ, எங்கோ இருந்தவர்கள் எல்லாம், எங்கேயோ சென்று, எப்படியெப்படியோ, என்னென்னவெல்லாமோ ஆகிவிட்டதையும் —ஆகியிருப்பதையும் கண்டிருப்பீர்கள். ஆனால், வாழ்வியல் நிலையில் நீங்கள் பெரிய மாற்றம் எதையும், இந்த அறுபதாண்டுக் காலத்தில் அடைந்து விட்டதாகக் கருதிக் கொள்ளமுடியாது.

அறிவு நிலையில், உணர்வு நிலையில், மொழி, இன நலன் பேணுவதில் நீங்கள் மற்ற பெரும்பான்மையிலிருந்து வேறுபடுகிறீர்கள். இந்த வேறுபாடுதான் தங்களை உலகில் தமிழன் வாழும் இடங்களிலெல்லாம் அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறது. அன்றைய கழகக் காலப் பெருஞ்சித்திரனார் எவ்வாறு வறுமையிலும் செம்மாந்த பெருமித நிலையில் இறுமாந்து வாழ்ந்தாரோ, அதே பெருமித நிலையைத் தங்களுக்குத் தருவதும்

அந்த வேறுபாடுதான். இன்றைய காலகட்டத்தில் வெறும் பொருள் வளம் பெற்றவனெல்லாம், மேலும் பொருளைப் பெருக்கவும், அல்லது ஏதாவது ஒரு பதவியைப் பெறுவதற்காகவும் தன்னிடம் அரை, குறையாக மிச்சம் மீதி இருக்கின்ற தன்மான உணர்வு, அறிவு நிலைகள் ஆகியவற்றையெல்லாம் மிக எளிதாகக் கூச்சமின்றிக் குடிப் பிறப்பையும் மறந்து யார் காலி-லும் மிக அருவருப்பின்றி விழுந்து, உயிரினும் மேலான மான உணர்வையெல்லாம் மிக எளிய தூசு போன்று காற்றில் பறக்க விடுகின்ற கயவர்கள் நிறைந்துள்ள மண்ணில், யாருக்கும் எதற்காகவும் அடிமையாகாமல், கொண்ட கொள்கையில் சிறிதும் பின்வாங்காமல், வறுமையிலும் செம்மாந்து வாழ்கின்ற சிறப்பு இருக்கிறதே, அதை இத் தமிழ்நாட்டில் மிகச் சிலரிடம் கூடக் காண்பது அரிதாய் இருக்கிறது. ஆனால் அப்பண்பு உங்களிடம் முழுமையாக இருக்கிறது. அப்பண்புதான் தங்களை மக்களிடம் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது, இந்த அறுபதாண்டுக் காலத்தில் நீங்கள் ஈட்டிய மிகப் பெரிய ஈட்டம் அது! மற்றவர்களால் இயலாத ஈட்டம்! நேர்மையாகக் கொள்கைப் பற்றோடு வாழும் வாழ்வின் நிறைவு. அவ்வாறு வாழ்வோரே உணர்வர். ''பொருளானாம் எல்லாம்'' எனத் திரியும் இழிவுப் பிறவிகள் உணரார்.

ஐயா! மொழி, இன நலன் காக்கக் களத்தில் நிற்கும் தங்களுக்குத் துணை செய்வோர் குறைவுதான். இன்றைய காலச் சூழல் அவ்வாறு சிறிய அளவில் உள்ள வெடி மருந்துதான், பெரிய மலையையே தகர்க்கிறது. சிறிய நெருப்புக் குச்சியின் நுனியில் தோன்றும் நெருப்புத்தான், பெரிய நாட்டையும், நகரையும் அழிக்கும் ஆற்றல்மிக்கதாக விளங்குகிறது. உலகில் உண்டான மாற்றங்களுக்கெல்லாம் எங்கெங்கோ வாழ்ந்த ஒரு சிலர்தாம் காரணியமாக இருந்துள்ளனர். உலக மக்கள் அனைவருமல்லர்.

பாவேந்தர் எத்தனையோ இடையூறுகளுக்கிடையில்தான் தனி மாந்தனாக, மொழி, இனத் தொண்டாற்றினார். அவர் இன்றில்லை. இருந்தாலும் அவர் கருத்துகள் இன்றும், வெடி மருந்தாக, நெருப்புக் குச்சியாக இன்றிருக்கும் சிலரது உள்ளத்திலாவது கருக் கொண்டிருக்கிறது. அதற்கு நெருப்பாக, உர-சும் தீப்பெட்டியாகத் தங்களைப் போன்றோர் விளங்குகிறீர்கள். தந்நலம், கயமை, அதிகாரப் பித்து என்ற பருவகாலம் மாறியிருக்கிறது. பருவம் என்றும் ஒரே மாதிரியா இராதன்றோ?

உண்மையான கொள்கையேந்திகள், குமுக மாற்றம் விரும்பிகள் நம் பின்னால் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், நம் கருத்துகளுக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறது, நம்மை எவ்வளவு பேர் பாராட்டுகிறார்கள், பொருள் வரவு எவ்வளவு கிடைக்கும், அரசினால் எவ்வளவு பயன் கிடைக்கும் என்றெல்லாம் கணக்குப் போட மாட்டார்கள். நாம் எடுத்துக் கொண்ட கொள்கை.

மக்கள் மாற்றத்திற்கு எந்த அளவு துணை புரியும்? எந்த வகையான மாற்றம் தேவை, எவ்வளவு தேவை என்பவற்றை மட்டும் கவனத்தோடு பார்த்துக் கொள்வார்கள்! அதைப் பரப்புரை செய்வதில், எவ்வளவு எதிர்ப்புகள் இருக்கும் என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான நோக்கோடு செயல்படும் சிலரில் தாங்களே முகாமையான பங்கு பெறுகின்றீர்கள். இப்பொழுது நன்கு முதிர்ந்த பட்டறிவுடையவராகத் திகழ்கின்றீர்கள். எனவே, இவ்வகையில் முன்வரும் இளைஞர்களை நெறிப்படுத்தி அவ்விளைஞர் கூட்டத்தைப் பெருக்குவதுதான் நோக்கமாக இருக்கும்என நம்புகிறேன். இன்றைய இளைஞர்களும் திசை மாறித்தான் செல்கிறார்கள். இல்லை, இல்லை மாற்றப்படுகின்றார்கள், அதையும் செப்பம் செய்தாக வேண்டும்.

பன்னூறு ஆண்டுகளாய் அடிமை வாழ்வு வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள். பல இன மக்களிடமும் அடிமைகளாய் வாழ்ந்தவர்கள். அதன் விளைவுதான் இன்னும் அவர்கள் இவ்வாறான நிலையில் இருக்கின்றார்கள். இந்நிலையே நீடிக்க இனப் பகைவர்கள் ஆவன அனைத்தும் செய்கிறார்கள். இனக் கேடர்களும் அதற்குத் துணை போகின்றனர். இவற்றுக்கிடையில்தான் இன மீட்சிக்கான பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. அத்தகைய பணிகளை எளிதாக அனைவரும் செய்துவிட முடியாது.

இன்று சிலர் அப்பணிக்கு முன்வருகிறார்கள். இருந்தாலும் வாழ்க்கை வளனைக் கருதாது துன்பங்களைத் தோளில் போட்டுக் கொண்டு, மெய்வருத்தம் பாராது கொள்கையே உயிர் மூச்சாய்க் கொண்டு, ஒரு புத்தனாகவும், பெரியாராகவும், பாவேந்தராகவும், உழைப்போர் எவ்வளவு பேர் இருக்கின்றனர்? எம் கண்ணில் முதலில் படுவது தாங்களே! மற்றவர்கள் பின்னரே. இத்தகைய கொள்கை மறவராகிய தாங்கள் அறுபதாண்டு அகவை அடைந்து விட்டீர்கள். இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் அதிகமாகும். அப்பணிகள் ஒரு முகாமையான காலகட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஐயா! தொண்டு செய்வோருக்கு அகவை (வயது) ஏது? ஓய்வு ஏது? தம்மைப் பற்றிய சிந்தனைதான் ஏது? தமிழகத்தின் சாவக்கேடு, நல்லறிஞர்களை வாழ்நாளில் மறந்து விடுவது, அவர்களது ஆற்றலை, அறிவை, உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள மறுத்து விடுவது, இறந்தபின் மணிமண்டபம் கட்டுவது புகழ் பாடுவது. இன்று அந்நிலையில் சிறிது மாற்றம் தெரிகிறது. அதற்கும் நீங்களே வித்திட்டுள்ளீர்கள். எனவே, அதைப் போற்றும் வகையில், தங்களது அறுபதாண்டுப் பிறந்தநாள் மகிழ்வை வெளிப்படுத்தும் முறையில், அவ்விழாவிற்குரிய காணிக்கையாக, உங்கள் தொண்டிற்குத் துணை நிற்கும் அறிகுறியாக, இவ்வஞ்சலுடன் நூற்று ஐம்பத்தோர் உருபாவுக்கான,

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்)

பாவிய நாயகர் பெருஞ்சித்திரனார்!

—த. அரிமா வளங்கோ. பிரான்சு—

பெரும் பேரறிஞர் விடுதலைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழரின் வாழ்வியல் வரலாற்றில், தடயம் பதித்துத், தமிழீழ அறங்கூர் மறத்தி "தானு" "செயற்கரிய செய்து" கண்ணகிக்குப்பின் அழியாத முத்திரை பொறித்த உண்மையைத் தம் நூறாசிரியத்தில் நுண்மை விளக்கமாக எழுதி வைத்த அருஞ் செயல் வருங்காலத்தில் வரலாற்றாசிரியர்களால்—கல்மேல் எழுத்தெனக் கண்டு—பாராட்டப் பெறும் என்பது பனிமலை போல் உறுதியாகும்.

கழகக்கால இலக்கிய வரிசையில் வைத்து எண்ணப் பெற வேண்டிய ஐயா அவர்களின் செய்யுள்களும், நூற்களும், பாக்களும் "இட்ட சாவம் முட்டுக!" என்னும் அறப்பாவாலும், "அறங்கூர் மறத்தி!'யைத் தமிழின வரலாற்றிற்கு அளிக்கும் "ஆகுமோ உலகு, அவள் அழிவிலாப் புகழ்க்கே!" என்னும் நூறாசிரியப் பாவாலும், அவர் சித்தர் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் என்பதை அவரது அணுக்கமும் தொடர்பும் உள்ளவர்களுக்கு உணர்த்துகின்றன.

நூறாசிரியத்தில் ௬௬—ஆம் பாடலாக முகிழ்த்த அறங்கூர் மறத்தியின் அரும் பெரும் ஈக மறச்செயலைச் செய்யுள் மிக மிக நுட்பமாகவும் உண்மைகளைத் திட்பமாகவும் விரிக்கின்ற நயத்தையும் அழகையும் குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

தம் தம் மானம் உயிர்—வாழ்வைக் கருதி, தமிழீழ மக்கள் நாட்டை விட்டோடிக் கொண்டிருக்கும் வேளையில், தானு என்னும் அறங்கூர் மறத்தி, தன் மானமாகிய கற்பைப் பகைவர்தம் கொடுங்கைகளால் இழந்த பின்பும், தன்னுடைய உயிரையே இழந்து தமிழினப் பழி துடைக்கும் செயலால் தன் வாழ்வையே இழப்பது உறுதி என்று அறிந்தே இம் மாபெரும் பணியைச் செய்திருப்பதை முதல் வரியிலேயே விதப்பாகச் சுட்டியிருப்பதைக் காணுகின்றோம்.

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரைவோலை ஒன்று அனுப்பியுள்ளேன்: அதை எமது எளிய காணிக்கையாக ஏற்றுக்கொள்க! இனிமேலும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்பதையும் இதன் மூலம் தெரியப் படுத்தி, அன்னைத் தமிழ் போல, அழியாக் குறள் போல, பீடு பெற நின்று, எதிர்ப்போருக்கு இமயமாய்த் தோன்றி, இனநலன் காப்போருக்குத் தென்றலாய் நடந்து, தமிழினம் மீட்சிபெறப் பல்லாண்டு உழைக்க, வாழ்க! வாழ்க!! வாழ்க!! என வாழ்த்தும்

அன்பன்,

புலவர் அறிவுடைநம்பி

மூலனூர், பெரியார் மாவட்டம்.

நாட்டை விட்டுத் தப்பி ஓடும் தமிழீழ மக்கள் வான்—நிலம்—நீர் வழிகளையும் காட்டு வாழ்வையும் போர்க்கள வாழ்வையும் சுவைத்துச் செல்லும் தன்மையைப் பாடல் மேலும் விரிக்கின்றது. ஐம்பெரும் பூதங்களாகிய மண், நீர், தீ, வளி, வானம் என்பவற்றுள் பிறர் வான்—நிலம்—நீரைப் பயன்படுத்திக் கரையேறப் பாடுபடும் வேளையில், அவர்கள் பயன்படுத்தாது விட்ட தீ, வளி என்னும் கருவிகளால் தன்னினத்தின் கறை துடைக்க தானு முனைந்ததைக் குறிப்பாக உணர்த்துகின்றது, இப்பாடல்.

"காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை" என்றதில் பற்பல நுண்ணிய குறிப்புகள் இழையோடுகின்றன. கட்டிளமைக் கன்னியாக—குமரி வடிவக் கொற்றவையாக தானுவை ஐயா காணுகின்றார். செங்கோலை வளைத்த கொடிய குற்றத்திற்காக நெடுஞ்செழியப் பாண்டியன் தன் உயிரைத் தந்து அதனை நிமிர்த்திய அருஞ் செயல் இறும்பூதைப் போன்று, பகைவரால் கன்னி இளமைக் கற்பழிக்கப் பட்ட பின்பும், தன் உயிரையே தந்து இனத்துயர் துடைத்த அரும்பெரும் இறும்பூது (Miracle) காரணமாக அவளும் (தானு) கன்னி அழியாத குமரித் திருமகளாக ஆனதை வரலாற்றிற்காக ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியுடன் ஐயா பொறித்து இருப்பதை உணர்ந்து புல்லரித்துப் போகின்றோம்; "ஒரு தனி நின்று ஊர் நடு சிதைத்த" அருஞ் செயல் மறம் எனப்பட்டாலும் இங்கே ஈகம் என்றதையும் எண்ண வேண்டியுள்ளது. தம் சாவப் பாடலில் 'சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும் வீழ்ச்சியுறுக" என்று இராசீவின் இறுதிக் காலத்தில் அவருக்கு (பாதுகாப்புத்) திட்டங்களும், (காக்கும் கருவிகளும்) கவசமும், (துணைவருவோர்—காவலர்) சூழ்ந்தார் துணையும் இல்லாமற் போகக் கடவது என்று சாவித்த ஐயா, மறைமுகமாகத் தானுவின் செயலுக்கு "வழி செய்து கொடுத்ததை" இங்கே கருத வேண்டியுள்ளது, ஆயினும், தானு என்னும் ஒற்றை இளம் பெண் இராசீவ் என்னும் உலகப் பெரு நாட்டுத் தலைவனாக இருந்து—எல்லாவகையான காவல் சூழல்களாலும் தற்காக்கப் பெற்ற ஒருவரை, கரவாக மறைந்து நின்று அம்பெய்த இராமனைப் போன்று தாக்கிக் கொல்லாமல், தமிழர்க்கே உரிய மறத்தன்மையுடன் "கண்ணின்று கண்ணற"ச் செய்வதைப் போல, வீழ்நனை வீழ்த்த நெஞ்சுக்கு நேர் நின்று தன் உடலையே வெடியாக்கி உயிரைத் திரியாக்கி நொறுக்கிய உயர்வை வெறும் மறத்தனம் என்பதை விட, அந்தச் செயலைச் செய்வதற்கு அவளுக்கு உள்ளூட்டமாக இருந்து ஊக்கிய ஈகத்தன்மைதான் கரணியம் என்பதால், ஈகம் என்றே காட்டினார்.

இவ்வாறு உயிர்வெடி கொண்டு பகைவரை அழிக்கும் மறத் துணிவு உலக வரலாற்றில் இதுவே முதல் முறை என்று உலகமே அதிர்ந்து போயுள்ளது; ஒருவாய்ப்பட எல்லாச் செய்தித்தாள்களும் இச் செய்தியை, தம் வியப்பையும் அதிர்ச்சியையும் விளக்க முடியாமல் வெளியிட்ட நிலையில், நம் ஐயா அவர்கள், இப்படிப்-

பட்ட தோர் இறும்பூதை உலகம் காலத்திற்கும் உணர வேண்டுமே என்ற அறக் கவலையால் இப்பாடலை எழுதியுள்ளார்கள்.

இராமனின் கதையை வடமொழியில் எழுதிய வான்மீகியார் அவர் எழுதிய பாவியத்தின் ஓர் உறுப்பினராக இறுதிக் கட்டங்களில் தம்மை (இலவ—குசர்களின் பிறப்பின் போது சீதைக்கு உதவிய முனிவராக வான்மீகி—இராமாயணத்தில் காட்டப்படுகிறார்) இணைக்கின்றார்.

தாம் எழுதிய சாவிப்புப் பாடலின் கருத்தை முற்றுவித்த காலமகளான "தானு" என்னும் தமிழ்க் குமரியைப் பாடியதால் பெருஞ்சித்திரனார் அவர்களும், இன நலன் கருதி நடந்த இப்பெரும் வரலாற்றுச் செய்தியுள் தாமும் பாவிய நாயகராகப் பொலிகின்றார்.

"மூளி நீ ஆகுக" என்று சாவித்ததால் முகமழிந்து போன இராசீவின் அவல முடிவும், அவரைக் கொன்றழித்த பெருமிதத்தால் "தானு"வின் முகம் மட்டும் அழியாது இருந்த காட்சியையும் நாம் மேலும் நினைவு கூர்ந்தால், அறப்பா நாயகர் பெருஞ்சித்திரனாரின் சாவிப்பு வரிகளை நிறைவேற்றிய தமிழீழ அறங்கூர் மறத்தியின் ஊழ்வினை வரலாற்றில் நன்றியுடன் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுப் போற்றப் படும் என்பதை உணர்வோம்! ○

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
ராகத் தங்களைத் திருவருள் படைத்துள்ளது. உ.த.மு.க. மேற்பொறுப்பை எவ்வெக் கரணியங்கள் கொண்டோ திரு. பறம்பை அறிவனாருக்கு அளித்துள்ளீர்கள்; அவர் அது தொடர்பான பணிகளைப் பார்க்கட்டும். தாங்கள் என் வேண்டுகோளை ஏற்கத் திருவுள்ளம் கொள்ள வேண்டும்.

தங்களைத் தவிர என் வேண்டுகோளை ஏற்பதற்குத் தமிழ் நாடு யாரையும் பெறவில்லை. இது பற்றிய செய்திகளை எனக்கு உடன் எழுதி விடுக்க வேண்டுகிறேன். தங்கள் பணிச் சுமையும் யான் அறிந்ததே, பிறபின் அன்பின்.—புலவர்.—வை.வீருண்டான்,

அரிமணம்-622201.

அன்பர்கள் பொறுத்துக் கொள்க!

'தென்மொழி'க்கு ஏற்பட்ட இயல்பான இடையூறுகளாலும், அடிக்கடி ஏற்பட்ட அச்சகப் பணியாளர்கள் தம் உடல் நலக் குறைவாலும், முகவர்களின் ஒத்துழைப்பின்மையாலும், தென்மொழியும், தமிழ்ச்சிட்டும், தமிழ்நிலமும் மிகுந்த காலத் தாழ்வுற்றே வந்து கொண்டிருப்பதற்கு மிகவும் வருத்தமும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறோம். அன்பர்கள் மனமிரங்கிப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

அரசியல் அறிவு பெற!

—பறம்பை அறிவன்—

அறிவாளர் (Intellectuals), மார்க்சியம் — இலெனினியம், பொதுவுடைமைச் சிந்தனை, பொதுமைக் கட்சிகளை விட்டு வெளியேறுவதேன்? இந்த வினாவிற்கு விடை தருவது கடினமே; என்றாலும், ஒரு மறுமொழி அணியமாக உள்ளது! அஃதென்னவென்று கேட்கின்றீர்களா? கூறுகிறேன்.

"அறிவாளர், கார்காலத்துக் குயில்கள்; கோடையில் தலைகாட்டாத வானம்பாடிகள்"

இது கசப்பான உண்மை என்பர்: ஆனால், அறிவாளரை அவ்வண்ணம் அணுகுதல் பிழையாகும் என்பதை நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்! உண்மை தேடி அறிய வேண்டிய ஒன்று!

ஒழுங்கமைவும், ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையையும் அறிவாளர் நேசிக்கின்றனர். அதேவேளை, இன்றைய எந்திர நாகரிகம் அவர்களை நம்பிக்கையற்றவர்களாக்கி உள்ளது. இதைப் பாராமல், "நேரத்தை வீணாக்குதல் வேண்டாம்; படிப்பாளிகள் கூட்டமே இப்படித்தான். நாம் உழவரிடம் போவோம்; உழைப்பவரைத் திரட்டுவோம். போர்க் குணமிக்க அணியைக் கட்டுவோம். அப்போது இந்தப் புரட்சிகர அறிவாளர்கள் 'தேநீர் விடுதி'களை விட்டுத் தெருவுக்கு வருவார்கள்; பொதுமைக் கட்சியில் இணைவார்கள்" என்று அரைகுறை மெய்களைச் சொல்லித் திரிவார்கள்.

இவர்கள் பாட்டாளிய உணர்வும், பொறுப்புணர்ச்சியும் அற்றவர்கள். ஆகவே, இப்படிச் சிந்திக்கிறார்கள்!

அறிவாளர் குறித்த இச்சிக்கல்களைக் கலந்துரையாடிக் கண்டறிவோம்; அண்மைக்கால குமுக வளர்ச்சிகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வோம். மூன்று நிலைகள், அறிவாளர் சிக்கலை அறிய உதவும்.

1) இன்றைய உலகப் பொதுக் கட்சிகளின் போக்குகள்.
2) பொதுமைக் கட்சிகளை மேலும் மக்கள் நாயகப் படுத்துவது.
3) மார்க்சியம் — இலெனினியம் எதிர் நோக்கியுள்ள, தொடர்ச்சியான வளர்ச்சி; இதுவரை சந்தித்திராத மெய்யியல், அரசியல், கொள்கைக்கு ஏற்பட்டுள்ள அறைகூவல்கள்.

மேலைக் காற்றும் கீழைக் காற்றும் ஊடுருவி இந்த மண்ணைக் குழப்பி விட்டன; சிக்கல்கள் பெருகிவிட்டன. எனவேதான், சோவியத்து ஒன்றியத்தில் 'புதுப்பித்தல்' வரவேற்புப் பெற்றிருக்கிறது. சீனாவில் 'பெய்சிங்கில்' (பீகிங்கில்) ஏற்பட்ட கொடுமை பலரையும் — குறிப்பாக மாணவர்களையும் தீவிரப் புரட்சிகர அறிவாளர்களையும்—தாக்கியுள்ளது.

'சீன மாணவர் போராட்டம்' பற்றிய சீன அரசியல் தலைமைக் குழுவின் ஆய்வறிக்கை—ஆவணம்—படித்தறியும் ஆர்வமின்றித் தொகுத்துணரும் தெளிவின்றி 'சில மார்க்சிய அடிப்படைகளை'க் கிளிப்பிள்ளை போலப் பேசிக் கொண்டிருப்பவர்களையும் நாம் பார்க்கிறோம்.

அடிப்படை பற்றிய வினாக்கள் சீனத்திலிருந்து மட்டுமா, கிழக்கு ஐரோப்பா, உருசிய வளர்ச்சி குறித்தும் வினாக்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சமவாழ்வு குறித்த சிந்தனைகள் மேலோங்கி உள்ளன.

''இறையாண்மை தோல்வியுற்றது. தேர்தல் தோல்வி படிப்பினை தந்துள்ளது. பொதுமையாளர் கற்கவேண்டியவை ஏராளம்—சீனாவில்—அது போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கான—இலக்கக்கணக்கான மாணவர்கள் அமைப்புரிமை அற்றவர்களாக அல்லல்படுகின்றார்கள். மக்களிடம் 'அதிகார மனப்போக்கு'ள்ளதைப் பார்க்கிறோம்'' என்னும் பல சிந்தனைகள் வடிவம் பெற்றுப் பூதமாகி வருதல் கண்கூடு!

1960 களில் கிளம்பிய வினாக்களுக்கு ஓரளவு விடையளிக்க இ. பொ. க., இ. பொ. க. (மா) அமைப்புகள் முயன்றன. இன்று இடது சாரி அறிவாளர்க்கும், பொதுவுடைமைக் கட்சிகளுக்கும் நடுவில் ஒரு பெரிய 'விரிசல்' இருப்பதைக் காணலாம்! இதனைத் தவிர்க்க விரிவான ஆய்வுகளை—மனந்திறந்த சிந்தனைகளை நாம் வரவேற்க வேண்டும். நம்மிடம் உள்ள 'மேட்டிமைத் தன்மை'களை உதறிவிட்டுக் கற்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். சிதறியோடிய அறிவாளர்களைத் திரட்டி இடைவெளியைக் குறைத்திடல் வேண்டும்.

புரட்சியொழுக்கம் பேணவும், கட்டுதிட்டுடன் செயல்படவும் அறிவாளர் தம்மைத் தகவமைத்துக் கொள்ளக் கட்சி உதவுதல் வேண்டும். சீர்குலைவு, தான் என்ற ஆணவம், முனைப்பு, வெற்று வீணான நெறிகளைப் புனையும் வேட்கை போன்றவற்றிலிருந்து அறிவாளரை விடுவித்தல் அவ்வளவு எளிதன்று!

மார்க்சு, இலெனின், மாஓ, சாரு—வரை ஏராளமான 'பட்டறிவு'ப் பட்டயம்—ஆவணம் நாம் கற்க உள்ளன. ஆனாலும் நாம் 'காசின் மறுபக்கத்தையும்' கண்டறிதல் வேண்டும். செய்தோமோ? சிந்திப்போம்.

இலெனின் காலத்தில் ஆக்கமான எழுச்சியான சூழல் கட்சியிலிருந்தது. தடையற்ற கலந்துரையாடல்கள் பேச்சுரைகள் நிகழ்ந்தன. அந்த மரபுதான் கட்சிக்குள் இணையான தலைமைகள் பல உருவாக உதவிற்று. இலெனின், பாட்டாளி ஒழுக்கம், கட்சி நடுவம் இவற்றில் வளைந்து கொடுத்ததில்லை.

எதிர்க் கருத்துகள் பற்றிப் பொறுமையாக ஆராயவும், அதிகார வெறியை எதிர்த்துப் போராடவும் மறந்து விட்டோம். அதன் விளைவை நாம் சந்திக்கிறோம்.

மக்களிடமிருந்து கற்கின்ற சிந்தனை—எண்ணம் வேண்டும்; அவர்களின் 'உணர்வுகளை' 'விருப்பங்களை' மதிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்;

கட்சி அமைப்புக்குள் கருத்துப்போராடி வெளியேற்றப்பட்டாலும், சரியான கருத்துகளுக்காக வெளியிலிருந்தும் ஒருவர் தம் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துதல் வேண்டும்; இது கட்சி—அமைப்பு வரலாற்றில் நாம் காணக் கூடிய நடைமுறையே ஆகும் !

'உண்மையாக இரு ; மார்க்சு உன்னிடம் இருப்பார்' இது வேதம்; ஆனாலும், மக்கள் நாயகப் பண்பே, கீழ் மேலிருந்து தொடர்ச்சியாகப் போராடி உருவாக்கும் உயிர்க் கொள்கையே குமுகாயத்தையும் அறிவாளரையும் கவர்ந்து உள்வாங்கி முன்னேற உதவும் !

மார்க்சியம்—இலெனினியம் ஓர் அறிவியல்; அதன் வளர்ச்சி பற்றி ஆராய்தல் என்பது புதிய இயல்பியல் கொள்கை, பழைய 'சார்பியல் கண்டுபிடிப்புகள்' ஆய்வுகள் இவற்றில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கும். ஆய்வுகள், தேடல்கள், புதிய முன்னேற்றங்கள் வரலாற்றின் வளர்ச்சியைக் குறிப்பன; புரட்சியாளரின் இறைக் குறிப்புகள், ஆவணங்கள் பற்றிய ஆய்வுகள், அறிவாளரைத் திசைதிருப்பலுக்கு உட்படுத்தி விடலாம்;

நாம் அறிவாளர்—அமைப்பு இடையே ஏற்பட்டுள்ள 'இடைவெளியை'ச் சரிசெய்ய முயல்வோம் ! அதேவேளை, செயல் ஊக்கம் குன்றாமல் கவனித்துக் கொள்வோம் ! மதகுருமார்கள் போல, 'மந்திர உச்சாடனம்' செய்யாமல், உலகின் மாற்றம், முன்னேற்றம் குறித்து அக்கறை செலுத்துவோம் ! ஆம், மார்க்சியம் 'மந்திர உச்சாடனம்' அன்று ! அஃதொரு செயலூக்கம் !!

மார்க்சியக்கொள்கை, மெய்ம்மம் பற்றிய ஆராய்வையும், புரிதலையும் மேலும் மக்களிடம் எடுத்துச் சொல்லும் பெரியதொரு வரலாற்றுக் கடமை நமக்குள்ளது;

மார்க்சிய மேற்கோள்களை நிரப்பிய 'கொள்கைப் போர்' நடப்பது ஒரு மேனியாவாக உள்ளது; எனவே, நாம் இப் 'போரைக்' கண்டு கொள்ளாமல் இருந்து விடலாம் என்ற முடிவுக்கு வருதல் கூடாது; கட்சிக்கும் அறிவாளர்க்கும் இடைப்பட்டுள்ள 'தொலைவை'க் குறைக்க முயல்வதுதான் வரலாற்றின் கட்டாயமாகும்;

எனவே, கடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல், கைப்பற்றிய நிகழ்காலத்திலிருந்து தூக்கியெறியப்படாமல், ஊன்றி நின்று எதிர்காலத்தை விழிப்பாகப் பற்றிக் கொள்ளப் போராடுவோம் —வெல்வோம்;

(தோழர் அரிந்தம் சென் "அறிவாளரே இணைக; ஒரு வரலாற்றுக் கடமை உள்ளது" என்ற ஆங்கிலக் கட்டுரையின் தாக்கமே மேலே உள்ளது.)

பறவைகள் மாநாடு!

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'பாவியக் கொத்'தில் 4-ஆவது பாவியம்.)

காட்சி—4.

உறுப்பினர் : கழுகு, காக்கை, வௌவால், குயில், சிட்டு, கிளி மற்றும் பறவைகள் கூட்டம்.

கழுகு : (அமர்ந்தவாறே) என் அருமைப் புள்ளினங்களே, நமக்கு முதலில் வேண்டுவது வயிறு நிறைய உணவு, நல்லகல்வி, சீரான குடியிருப்பு அல்லவா ?

பறவைகள் : (ஒன்று சேர்ந்து) ஆம், ஆம், மன்னா, ஆம்.

கழுகு : (அதிகாரத்துடன்) ஏய் ! நான் சொல்லுவதில் மாற்றுக் கருத்துகளிருந்தால் சொல்லுங்கள்.

காக்கை : இல்லை, இல்லை.

வௌவால் : நீங்கள் சொல்லுவதை ஆராயாமல் அப்படியே வரவேற்கிறோம்; வரவேற்கிறோம்.

காக்கை : உங்கள் பேச்செல்லாம் நஞ்சில் விளைந்த முத்தாச்சே.

கழுகு : சீ, காக்கையே சிந்திக்காமல் பேசக்கூடாது. நஞ்சில் விளைந்த முத்து என்றால், நஞ்சல்லவா இருக்கும். கருப்பா, கன்னலில் விளைந்த முத்து என்று சொல்.

காக்கை : (சட்டென்று) ஆமாம், ஆமாம் ! இனிக்கும். அப்படித்தான்.

கழுகு : சரி கேளுங்கள். நாமெல்லாம் ஒற்றுமையாக வாழ வேண்டுமல்லவா ?

வௌவால் : இதிலென்ன ஐயம். ஒற்றுமையாக வாழ்ந்தால்தானே ஒருமைப்பாடு வளரும். கன்னியாகுமரி தொட்டு இமயம் வரை ஒரே இனம் என்று எண்ணிக் கொள்ள வேண்டும்.

கழுகு : ஆங் ! அப்படிச்சொல். நீ நல்லவன். நம் எண்ணத்திற்கு இசைந்தவன். உனக்கு ஒரு முனைவர் பட்டம் கொடுக்கலாம்.

வௌவால் : கீ ! கீ ! (சிரிப்பு) அதற்காகத்தான் மன்னா, உங்கள் பின்னாலேயே சுற்றுகிறேன்.

கழுகு : கடைசி வரைக்கும் சுற்று. காலங்கனியும் போது பட்டமும் கனியும்.

வௌவால் : வ்வூ வ்வூ. எப்படியும் என்னைக் கொஞ்சம் காப்பாத்துங்கோ.

கழுகு : சரி; அ'தாவது கேளுங்கள். நாம் ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் நினைத்ததை முனைப்பாக முடிக்க முடியும்; மேலும் எதையும் சிறப்பாக முடிக்க முடியும். அல்லாக்கால் எடுத்த செயல்கள் யாவும், தீ முன்வைத்த பஞ்சு போல் பொசுங்கிப் போகும். அதனால் ஒற்றுமையை எப்படிப் பெறுவது? அதைத்தான் நான் சொல்லப்போகிறேன். எல்லாரும் உள்ளத்தைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்; நம்மில் பல இனங்கள் இருக்கின்றன; அ'தாவது காக்கை ஓரினம், கொக்கு வேறினம், வக்கா ஓரினம், மைனா மற்றொரினம், புறா வேறோரினம், வானம்பாடி இருக்கிறதே அ'து ஓரினம், கிளி ஒரு தனி இனம், மயில் மாற்றினம், இப்படிப் பல இனங்கள். இவை ஒவ்வொன்றும் வேறு வேறு மொழிகளைப் பேசுகின்றன. ஒருவர் மொழி ஒருவருக்குச் சரியாகத் தெரியாது; நான் சொல்வதில் கருத்து வேற்றுமை உண்டா ?

காக்கை : நான்தான் முதலிலேயே சொல்லி இருக்கின்றேனே. நீங்கள் சொல்வதில் அமெரிக்கப் பறவைகளுக்கு மாற்றுக் கருத்துகள் இருந்தாலும் எங்களுக்கு இருக்காதென்று;

கழுகு : சரி; அப்படிச் சொல், நம்முடைய வாழ்க்கை கூட வேறு வேறு வகையானது. சில பறவைகள் ஊன் உண்ணும், சில சைவம். ஆனால் இப்படி வேற்றுமை இருந்தால் ஒற்றுமை வளருமா? வளராது. பல மாநிலங்களில் இருந்து வந்திருக்கிறீர்கள் என்றாலும் நாமெல்லாம் பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள். மொழி கூட வேற்றுமையாக இருப்பதால் ஒருவர் பேசுவது ஒருவருக்குப் புரியாது. ஒழுக்கமும் அப்படித்தான். வடக்கே ஒரு மனைவிக்கு ஐந்து கணவர் என்பர். தெற்கே உள்ளவர்கள் ஒருவனுக்கு ஒருத்திதான் என்பர். கணவன் இறந்தாலும் மனைவியும் சாக வேண்டும் என்று இன்னும் கூறுகிறார்கள்; அப்படியே செய்கிறார்கள். தென்னாட்டில் கணவன் இறந்த பின் மறுமணம் செய்து வாழலாம் என்பர்; ஆக இப்படி வடக்கும் தெற்கும் பழக்கத்தால், ஒழுக்கத்தால் வேறுபட்டவை; வடக்கே உள்ளதுகள் கோதுமை சாப்பிடும். தெற்கே உள்ளதுகள் அதைச் சாப்பிட்டால் வயிற்று வலியால் உருளும். ஏன்? எதை எடுத்தாலும் வேற்றுமைதான். இதனால் வேற்றுமை உணர்வு வளர்கிறது; அதனால் மொழி, ஒழுக்கம் ஆகியவற்றை ஒன்றாக்கி விட்டால் எவ்வகைச் சிக்கலும் வளராது.

குயில் : மன்னா, மன்னிக்க வேண்டும்; எந்த ஒழுக்கத்தைப் பின்பற்றச் சொல்லப் போகிறீர்கள்?

கழுகு : ஒரு ஆண் பறவைக்கு ஐந்து பெண் பறவைகள்தான் சரியென்றால் அதையே ஏற்றுக் கொண்டாலென்ன ?

குயில் : மன்னா வேண்டாம்; எங்களுடைய ஊர் கண்ணகி பிறந்த ஊர்; ஏற்றுக் கொள்ள முடியாது;

கழுகு : அப்பவே சொன்னேன்; என் கருத்தில் மாற்றுக்

கருத்துகள் இருந்தால் சொல்லலாமென்று அப்போதே சொல்லியிருக்கலாம் அல்லவா ?

குயில் : மன்னு! எதையோ, நல்லதைச் சொல்வதாய்ச் சொற்களை இழுத்து இழுத்துக் கொண்டு மயக்கி இப்பொழுது தானே சொல்லுகிறீர்கள், பிடிக்காத செய்தியை. இன்னும் என்ன சொல்லப் போகிறீர்களோ, சொல்லுங்கள் விரைவாக.

கழுகு : நாமெல்லாம் ஒன்று போல ஒற்றுமையாக இருக்க கழுகு மொழியைக் கற்க வேண்டும்.

குயில் : கட்டாயமாகவா ?

கழுகு : ஆமாம். நீங்கள் ஒன்றும் அஞ்சவேண்டாம்; கழுகு மொழி படிக்க மிக எளிது. பழக மிகக் குளிர்மை. பைங்கிளியும், குயிலும், மயிலும், மாடப்புறுவும் அவர்களுடைய மொழிதான் உயர்ந்த மொழி என்றாலும், கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரைக்கும் ஒரே நாடாக இருப்பதால் இந்நாட்டிற்கு வேண்டிய மொழி கழுகு மொழியேதான். வேறு மொழிகள் யாவும் கரடு முரடானது. மேலும் கொஞ்சம் கொஞ்சம் பேர் பேசும் மொழி. ஆனால் கழுகு மொழி என்பது ஆளுமை செய்யும் ஆட்சியாளன் மொழி. எனவே அனைவரும் கழுகு மொழியைக் கற்றால் எல்லாரும் ஒற்றுமையாக வாழமுடியும்.

பறவைகள் : (ஒரே கூச்சல் ; குழப்பம் ! ஒவ்வொன்றும் தங்களுக்குள் கருத்து மோதலில் ஈடுபடுகிறது.)

கழுகு : (உரத்தக் குரலில்) அங்கே என்ன கூச்சல் குழப்பம்? ஏய் ! இரும்புச் சிறகால் அடித்து அடக்குவேன். அமைதியாக இருங்கள். நான் பேசும் போது எவருக்கும் தடுத்துப் பேச சட்டத்திலே இடமில்லை. நன்றாகக் கேட்கவும்; கன்னி முதல் இமயம் வரை ஒற்றுமைக்கு என்ன வழியென்றால், நல்லவழி எங்கள் மொழி கழுகு மொழியை ஏற்றுக் கொள்வதுதான். கழுகு மொழியில் புதுமைக் கருத்துகள் பூத்துக் குலுங்கும். பழமையைப் பேசுபவர்களுக்கு அதன்மீது பற்றுதல் இருக்கலாம்; அந்தப் பற்றால் புதுமையை வெறுத்தால், சிறுமையே வரும். நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், என் கருத்து மிக உயர்ந்த மெய்ப் பொருளைக் கொண்டது என்பது தெளிவாகும். கழுகு மொழி உயர்ந்த மொழி என்று உலகத்தார்களுக்குக் கூடத் தெரியும். இதை ஏற்றுக் கொள்கிறவர்கள் பறவை இனங்களில் சிலருண்டு. அப்படி இருக்க என் கருத்தை யார் மறுப்பார்? (அருகிலிருந்த காக்கையை திமிர்ப் பார்வையால் நோக்கி) என்ன காக்கையாரே, அப்படித்தானே

காக்கை : ஆம் ! மன்னு ஆம் ! உங்கள் கருத்தை எவரும் எதிர்க்க முடியாது. (பறவைகளைப் பார்த்து) நம்முடைய ஒற்றுமைக்கு வழி சொன்ன கழுகரசனுக்கு உங்கள் சார்பாக (பூமாலையைக் கால்களால் இடுக்கி) இந்தப் பூமாலையை மகிழ்ச்சி

யோடு அணிவிக்கின்றேன். (பறவைகளை நோக்கி) எல்லோரும் சிறகுகளை அடியுங்கள் !

வெளவால் : (எழுந்து) வாழ்க வாழ்க ! கழுகரசன் வாழ்க!

பறவைகள் : (சில அச்சத்தால் கட்டாயத்திற்காகச் சிறகடித்தன.)

கழுகு : இலக்கக் கணக்கில் இங்கே பறவைகள் இருக்கின்றன. சிறகடிகள் மிகுதியாக ஒலிக்கவில்லை. (காக்கையைப் பார்த்து) காக்கையாரே! அதோ பார், சிட்டும், மயிலும், குயிலும் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டிருக்கின்றன. என்ன கிளியாரே சிறகடிக்கக் காணோம்.

கிளி : தேன் கொட்டிய சிறகை எப்படி அடிப்பது ?

கழுகு : (அருகிலிருந்த காக்கையையும் வெளவாலையும் விழித்து) என்ன ? காக்கையாரே, வெளவாலே, பறவைகள் குசு குசு என்று பேசுவது போலத் தெரிகிறது. பறப்பதும், பதுங்குவதும் வருவதும் போவதுமாக இருக்கின்றன. என்ன ? என் கருத்து பிடிக்கவில்லையோ ? சரி ஒன்று சொல்லுகிறேன். எல்லாரும் அமைதியாக மரத்தில் அமருங்கள். என் கருத்துக்கு மாற்றுக் கருத்திருந்தால் யாரும் கூறலாம். நீங்கள் சொல்லுவது தள்ளத் தகாததாக இருந்தால் மேற்கொண்டு சிந்திப்போம். நான் சிந்தித்தே இந்தக் கருத்தைக் கூறினேன். ஆனால் நீங்கள் சிந்தித்திருக்க மாட்டீர்கள் என்பதும் விளங்குகிறது. சரி இருக்கட்டும். நான் சொன்னதில் மாற்றுக் கருத்துகள் இருந்தால் யாராவது கூறலாம்.

சிட்டு : (எழுந்து) கழுகரசே ! நான் சொல்வது எதிர்ப்பதற்கன்று. நீங்கள் சொன்ன மொழிச் சிக்கலில் இருக்கும் கருத்து வேறுபாட்டிற்கு விளக்கம் கேட்கவே.

கழுகு : உன்னைக் காட்டிலும் உருவத்தில் பெரிதாக இருக்கும் கூழைக்கடா (கொக்கினத்தில் ஒன்று) நாரையும், கொக்கும், வக்காவும், வாயாடாமலிருக்கும் போது நீ ஒரு கடுகளவு இருந்து கொண்டு துணிந்து எதிர்க்கிறாய். ம் (சினமாக) என்னவென்று சொல்.

சிட்டு : மன்னா ! சினக்க வேண்டாம். உருவத்தில் பெரிதாக இருந்தாலும் உணர்வு வேண்டுமல்லவா ? கடுகு சிறுத்தாலும் காரத்தில் குறைவிருக்காது மன்னா! கருஞ் சிறுத்தை பூனை போன்றது. யானையை அடித்து வீழ்த்தி விடுகிறதே.

கழுகு : அந்த விளக்கமெல்லாம் எனக்குத் தெரியும். என்ன சொல்லப் போகிறாய் ? அதைச் சொல்.

சிட்டு : ஓர் இசைக்குழு இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்.

கழுகு : ம். சரி !

சிட்டு : அந்தக் குழுவில் புல்லாங்குழல் ஒருவகையிலொலிக்-கும். யாழ் இன்னோர் இசையைக் கூட்டும். இணையத்தின் (ஆர்மோனியம்) ஒலி இனிக்கும். கொம்பு கலக்கும், முரசு ஒருவகையில் முழங்கினால், குடப்பறை (குட வடிவுள்ள பன்றிப் பறை) குமுறும், பம்பையும் கரடிப்பறையும் கொட்டும் ஒலி வேறுவேறாகும். சங்கும் மாற்றொலி தந்து இனிக்கும். இவை யாவும் பல இசையில் இயங்கி பண் சுவை தந்து நிற்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவை யாவும் ஒரே ஒலி எருமைமாடு போலக் கத்த வேண்டுமென்றால் பலவகை இசை ஏன் ?

கழுகு : இன்னும் இருக்கிறதா ?

சிட்டு : இருக்கிறது. அ, என்ற குறில் ஒலிப்பும், 'ஆ' என்ற நெடில் ஒலிப்பும் ஒன்றாக ஒலித்தால் வேற்றுமையான பொருளைச் சுட்ட ஒரே ஒலியை ஒலிக்க முடியாது. அத்திக்குக் குறிலும், ஆலம் என்பதற்கு நெடிலும் இல்லாவிட்டால் இரண்-டையும் 'அ' என்ற குறிலிலேதான் ஒலிக்க வேண்டும் என்பது அறிவுடைமையாகாதே.

கழுகு : அந்த ஒலிகள் கழுகு மொழியிலும் உண்டே !

சிட்டு ; எல்லா மொழிகளிலும் எல்லா ஒலிகளும் கிடை-யாது. காக்கை கரைவது போல குயில் கூவாதே.

கழுகு : பயிற்சியால் வரலாம். அப்படி ஒலிக்குறைவிருந்தால் வேறு மொழிகளிலிருந்து ஒலிகளைக் கடன் வாங்கிக் கொள்ளலாம் பலவகைப் பறவைகள் பல மொழிகள் பேசுவதைவிட அனைவரை-யும் ஒன்று சேர்க்க ஒரே மொழியைப் பேசுவதே நல்லது.

சிட்டு : சொற்களைக் கடன் வாங்குவது இழிவு என்று நாங்கள் கருதுகிறோம். அந்த நிலையில் உங்களுடைய கழுகு மொழி இருந்-தால் அதை நல்ல மொழியாக உருவாக்குவதற்குள் அவரவர் மொழியையே பேசிக் கொள்வது நல்லது. மன்னா ! கேளுங்கள் மல்லிகையின் மணம் வேறு, அதன் அமைப்பு வேறு. அதுபோன்ற மணமும் உருவ அமைப்பும் செடிமுளரிக்குக் கிடையாது. மருக்-கொழுந்தின் மணம் தாமரைக்கு வராது. இவற்றையெல்லாம் ஒரே மணமாகவும், உருவாகவும் இருக்கும்படி செய்வது எவரா-லும் முடியாது. மேலும் மன்னா ! அப்படிச் செய்வதும் தேவை-யற்றது. எல்லாம் ஒன்றாக இருந்தால் ஒவ்வொன்றின் தனிமதிப்பு இல்லாமல் அல்லவா போய்விடும். சைவ உணவு உண்ணும் பறவையை ஊன் உணவு உண்ணச் சொன்னால் ஒத்துக் கொள்ளும் பறவை எங்கே இருக்கிறது ? மன்னா உங்களைச் சைவ உணவு சாப்பிடச் சொன்னால் சரி என்பீர்களா ?

கழுகு : நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்பதைப் புரியாமல் பேசுகிறாய். இந்தியப் பறவைகளும் இங்கிருக்கின்றன; தமிழகப் பறவைகளும் இருக்கின்றன. அனைவரும் இணைந்து வாழ ஒரே மொழியைப் பேசுவதால் தான் முடியும்.

சிட்டு : அப்படிக் கழுகு மொழியால்தான் ஒன்றிவாழ முடியும் என்றால் அந்த ஒருமைப்பாடே எங்களுக்கு வேண்டாம்.

கழுகு : (சினத்துடன்) ஏ! சிட்டுக் குருவியே! வெண்டை விதையாட்டம் இருந்து கொண்டு முரண்படக் பேசிக் கொண்டிருக்கிறாய். வடக்கே உள்ள பறவைகளும் தெற்கே உள்ள பறவைகளும் பேசிக் கொள்ள அனைவருக்கும் தெரிந்த ஒரு பொது மொழி வேண்டுமா? வேண்டாவா?

சிட்டு : மன்னா, கருத்துப் பரிமாற்றத்திற்காகப் பேசும்போது சினந்தால் ஒரு முடிவுக்கு எப்படி வரமுடியும்?

ஆந்தை : ஆர்ர் ஆர்ர்.

கழுகு : ஆந்தையா அலறுவது?

ஆந்தை : ஆமாம் நான்தான்.

கழுகு : என்ன சொல்லப் போகிறாய்?

ஆந்தை : ஆந்தை மொழி என்று உலகப் பறவை மொழி (ஆங்கிலம் போன்றது) ஒன்று இருக்கிறது. அம்மொழி அனைவருக்குந் தெரியும். அதைப் பேசி வெளிநாடுகளில் கூட சில நாடுகளுக்குப் போக முடியும். இந்தியப் பறவைகளுக்குத் தெரிந்த, புழக்கத்தில் இருக்கும் பழக்கப்பட்ட மொழி. அதை தேவைப் பட்டால் பொது மொழியாக வைத்துக் கொள்ளலாம்.

கழுகு : அது புறத்தவர் (அந்நிய) மொழி.

சிட்டு : எங்களைப் பொறுத்தமட்டில் கழுகு மொழியும் புறத்தவர் (அந்நிய) மொழியே. பறவை மொழியைக் கற்றதினால் அடிமை வாழ்வு வராது. கழுகு மொழியைக் கற்றால் உங்கள் இனத்திற்கு நாங்கள் அடிமையாக வேண்டும். கிளி, மாந்தர் மொழியை கற்றதால் அவர்களுக்கு அடிமையாவதைப் போல, நாங்கள் உங்களுக்கு அடிமையாக வேண்டும். அதனால் நான் சொல்வதை அருள் கூர்ந்து செவிமடுக்க வேண்டுகிறேன். (தொடரும்)

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17—2—91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு : 9-00 அச்சுத்தாள் பதிப்பு : 6-50
இஃது ஒரு புதிய வெளியீடு. அஞ்சல் செலவு : 2-00
தென்மொழி, சென்னை-5.

கனன்றெழுக!

— பாவலர். இளஞ்சித்திரன —

தென்னவன் நீ! நீஎவர்க்கும் அடிமை இல்லை!
தென்குமரித் தமிழ்நிலத்தை ஆண்டிருந்த
மன்னவன் நீ! நாடற்ற நடலை இல்லை!
மண்பதையை வென்றவன் நீ! கோழை இல்லை!
முன்னவன் நீ! இறையாண்மை மிக்கவன் நீ!
மூத்தமுதல் குடிமகன் நீ! உலகுன் எச்சம்!
என்னவன் நீ! தமிழன் நீ! தூங்கி வந்தால்
எதுநடக்கும்? விரைந்தெழுக விடுதலைக்கே!

கண்டவர்கள் உன்னையின்று மிதிக்கின்றார்கள்!
காரியுமிழ்ந் திடும்படியாய்ப் பார்க்கின்றார்கள்!
மண்நிலத்தை எவனோஇன் றாளுகின்றான்!
வரப்பிட்டு வேலிவைத்துத் தனதென்கின்றான்!
உண்டுருண்டு கிடக்கும்கள் குடியன் போலும்
உணர்வற்றுக் கிடக்கின்றாய் நீயோ! வெட்கம்!
பண்டிருந்த நிலைகாற்றில் பறக்கலாமோ?
பழியன்றோ! பதைத்தெழுக விடுதலைக்கே!

கண்ணிருந்தும் குருடனென ஆகி விட்டாய்!
காலிருந்தும் முடவனென முடங்கி விட்டாய்!
மண்ணிருந்தும் வேரற்ற மரம்போல் வீழ்ந்தாய்!
மானத்தில், குலப்பண்பில் அட,ஓ, தாழ்ந்தாய்!
பண்ணிருந்தும் குரலிருந்தும் பாட மாட்டாப்
பாழ்வாயன் ஆகிவிட்டாய்! ஊமை போல்வாய்!
புண்ணிருந்தும் மருந்திட நீ மறுத்தால் எங்கே
புரட்சிவரும்? விரைந்தெழுக விடுதலைக்கே!

கன்னடத்தான் அடிப்பதெல்லாம் அடியில்லையா?
கட்டையிலுன் இரத்தத்தில் சூடில்லையா?
புன்நடத்தைச் சிங்களத்தான் உதைக்கின்றானே!
போராட்டக் களமிருந்தும் பதுங்கல் ஏன்நீ?
உன்நடத்தை சரிஇல்லையே! உதைவாங் கத்தான்
உன்னைமண்ணில் போட்டாளா உன்றன் அன்னை?
முன்நடத்தை, வீரமில்லா திருந்தால் யார்தாம்
உன்னைமதிப்பர்? முண்டெழுக விடுதலைக்கே!

பகைசூழ, பகைக்கெல்லாம் கைகள் கட்டிப்
பல்லிளிக்க அரசியலா? அதிலுன் வாழ்வா?
நகையாடும் படிஇனத்தைப் பகையின் கையில்
நலியவிட்டோர் அரசியலா? அதில்வீறார்ப்பா?
தொகையாகத் தமிழினத்தைச் சாகடிக்கத்
துணைநீயா? அரசியல் தான் அதற்குப் பேரா?
வகையாக அதையுணரா திருந்தால் நீயே
மறைந்தழிவாய்! விரைந்தெழுக விடுதலைக்கே!

(தொடர்ச்சி 30-ஆம் பக்கம்)

செய்திகள்

1. தென்மொழி ஓவியர் ப.அறவாழி இல்லத் திருமணம். பூங்குழலி—விசுவநாதன்—நீடு வாழ்க.

கடந்த 16-2-92 (கும்பம் 4) ஞாயிற்றுக் கிழமை காலை 7-30 மணியளவில், உடுமலைப் பேட்டை, போழறப்பட்டி, தென்மொழி ஓவியர் ப.அறவாழி—தி.அன்னகாமு அவர்களின் மகள் செல்வி அ.பூங்குழலிக்கும், தளவாய்ப் பட்டணம் பெ.சுப்பிரம்மணியன்—அமராவதி இணையரின் மகன் செல்வன் சு.விசுவநாதனுக்கும், உடுமலைப் பேட்டை, முருகன் கலையரங்கத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் தமிழ்த் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி உ.த.மு.க. பொதுச் செயலாளர் அறிஞர்—பறம்பை அறிவனார், புலவர் மா.அரங்கநாதன், சு.முத்துசாமி, புலவர். வீர. கலாநிதி, பாவலர் கலை அருட்செல்வன், பாவலர் ஒடவை ந. தமிழ்வேந்தன், புலவர். வே.அ.இராமசாமி, இரா.கோபாலன், அரசு மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள், மாகாளியப்பன் ஆகியோர் நல்லுரை வழங்கினர். வரவேற்புரையும் நன்றியுரையும் திரு. ப.அறவாழி அவர்கள் ஆற்றினார்.

2. 'தடா'வை எதிர்த்துக் கண்டனக் கூட்டம்:

சென்ற 19-2-92 அறிவன் மாலை 6 மணியளவில் சென்னை, அம்பத்தூர், பாடி, யாதவர் தெருவில், புரட்சிகர இளைஞர் முன்னணி (RYF), மக்கள் உரிமைக் கழகம் (OCDR), சென்னை, செங்கை ஆகிய இயக்கங்களின் சார்பில் 'தடா' நாயகி செயலலிதாவைக் கண்டித்து ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மக்கள் உரிமைக் கழகப் பொதுச் செயலாளர் பி.வி.இராமானுசம் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், வழக்கறிஞர் பி.வி.பக்தவத்சலம், (ம.உ.க.) தலைவர் பொழிலன், நீ.ப. சுந்தரம், அசீதன், தியாகு, சுப.வீரபாண்டியன், அரிமா, ஆவடி மனோகரன், நெடும் பயணம் சுந்தரம், பா.இரவைக் கண்ணன் முதலியோர் பங்கு கொண்டு கருத்துரை வழங்கினர். இரவு 10-30 அளவில் நிகழ்ச்சி முடிவுற்றது.

3. கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி:

சென்ற 30-3-92 திங்கட் கிழமை பிற் பகல் 3-30 மணியளவில், புதுக்கோட்டை, மா.வ.மேலைச் சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில், பண்டித மணி ஆய்வரங்க ஆண்டு, நிறைவு விழா, கல்லூரி முதல்வர், முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரா. தா.மணி வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் முன்னுரைக்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் நிறைவுப் பேருரை நிகழ்த்தினர்; நிகழ்ச்சிக்கு ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர், மாணவியர் முதலியோரும், ஊர்ப் பெரியவர்களும், புதுக்கோட்டையிலிருந்து திருமிகு.பாவாணன் முதலிய தென்மொழி அன்பர்களும் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்திக் கொடுத்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

4. திருவள்ளுவர் மழலையர் பள்ளி, திருவான்மியூர், ஆண்டு விழா:

கடந்த மேழம் 21 (3-4-92) வெள்ளி மாலை 6 மணி அளவில், சென்னை 41, திருவான்மியூர், பெரியார் நகரில் உள்ள திருவள்ளுவர் மழலையர் பள்ளி (தமிழ் வழிக் கல்வி, ஆங்கிலம் துணை மொழி)யின் ஆண்டு விழா வ.ஆ. மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் திரு. மா.செ.தமிழ்மணி அவர்களின் தலைமையிலும், புலவர் துகிலி. ப,சம்பந்தம், கன்னியப்பன் ஆகியோர் முன்னிலையிலும்,மிகுந்த சீரொடும் சிறப்பொடும் நடைபெற்றது. பள்ளித் தாளாளரும் தலைமை ஆசிரியையும் ஆகிய திருவாட்டி இறை. பொற்கொடி அவர்களும் பிற ஆசிரியைகளும், இளம் மாணவ மாணவியர்களை நன்கு பயிற்றுவித்துப் பல கலை நிகழ்ச்சிகள், சிறு நாடகங்கள், பாடல்கள் ஆடல்கள் ஆகியவற்றில் பங்கேற்கச் செய்து, கூடியிருந்தவர்களை மகிழ்விக்கச் செய்தனர்; விழாவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பங்கேற்று மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி, பள்ளியின் நோக்கத்தையும் வளர்ச்சியையும் பாராட்டி வாழ்த்தினர்.

இறுதியில் தலைமையாசிரியர் திருவாட்டி இறை-பொற்கொடி நன்றியுரை கூறிட விழா இனிதே நிறைவுற்றது. தொடக்கத்தில் விழாவில் கலந்து கொண்ட ஊர்ப் பெரியோர்களுக்கும், நிகழ்ச்சியாளர்களுக்கும், ஆசிரியைகள்,மாணவர்களுக்கும், சரவணபவன் உண்டிச் சாலையினர், இலவயமாகச் சிற்றுண்டியும் பனிக்குழையும் வழங்கினர்;

5. வளர்மதி—சதாசிவன் நீடூழி வாழ்க!

நிகழும் தி.வ. ஆண்டு 2023 மீனம் 23 (5-4-92) ஞாயிறு, காலை 7 மணியளவில் வ.ஆ.மா.வ. வந்தவாசி, வ.எ.அ.திருமணக் கூடத்தில், கீழ் நர்மா புலவர் வெ. மாசிலாமணி—கிருட்டிணவேணி இணையரின் மகள், செல்வி. மா.வளர்மதி (அறி.மு.)—வுக்கும், செங்கை அண்ணு மா.வ., இராமாபுரம், திருவாளர்கள் சின்னசாமி—கண்ணம்மாள் இணையர்களின் மகன், செல்வன் சி.சதாசிவன் க.மு.—வுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. திருமண நிகழ்வுக்கும் தலைவரின் அரிய வாழ்வியல் விளக்கவுரைக்கும் பின்னர், ஆலந்தூர் தா.வோ. பூபதி, வேலூர் புலவர் குமர. தன்னொளியன், செய்யாறு அ.பொ.அறவாழி, மாத்தூர் மா.செ.தமிழ்மணி ஆகியோர்

மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர்; இறுதியில் புலவர் வெ.மாசிலாமணி அவர்களின் நன்றியுரைக்குப் பின், விழா இனிதே நிறைவுற்றது.

6. இளம்வழுதி—சங்கரி நீடூழி வாழ்க!

சென்ற 23-4-92 வியாழக் கிழமை காலை 7-30 மணியளவில், புதுவை, கதிர்காமம் ஆ.மாரிமுத்து—மீனாட்சி இணையரின் இளைய மகனும், நெடுநாளைய தென்மொழி அன்பரும், தீவிரத் தமிழ்த் தொண்டரும் ஆகிய கதிர்—சிவன் அவர்களின் இளவலும் ஆன செல்வன் மா.பாலசுப்பிரமணியன் அறி.மு., கல்.இ. என்ற இளம்வழுதி அவர்களுக்கும், புதுவை, முத்தியால் பேட்டை மதிவாணன் அவர்களின் செல்வி. சங்கரி க.இ.க்கும், புதுவை, முருகனடியார் திருமண நிலையத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ் மரபுத் திருமணம் இனிதே நடைபெற்றது. திருமண நிகழ்விற்கும், தலைவர் முன்னுரைக்கும் பின்னர், மண மக்களை வாழ்த்தி, சொல்லாய்வறிஞர், செஞ்சொற்கதிரவன் ப.அருளி அவர்கள் நல்லுரை வழங்கினார்; இறுதியில் மணமகன் நன்றியுரைக்குப் பின் நிகழ்வு நிறைவுற்றது.

7. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆண்டு விழா ஆட்டுப் பாக்கம். நெமலி ஒன்றியம்:

சென்ற 30-4-92 வியாழன். மாலை 6 மணியளவில் நெமலி ஒன்றியம் (வ.ஆ.) ஆட்டுப் பாக்கம் ,ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் ஆண்டு விழா, மேனாள் நெமலி ஒன்றியப் பெருந் தலைவர் ஆ.கோ. வேங்கடாசலனார் அவர்கள் தலைமையிலும், துரை—அருணாசலனார் அவர்கள் முன்னிலையிலும் இனிதே நடை-பெற்றது. நெமலி ஒன்றிய உதவிக் கல்வி அலுவலர் வி.வச்சிரவேலு அறி.இ.,கல்,மு அவர்கள் வாழ்த்துரை வழங்கி-னர். திண்டிவனம், கலைக் கல்லூரிப் பேராசிரியர் பா.கல்யாணி அவர்கள் அண்ணல் அம்பேத்கர் நூற்றாண்டு விழாச் சிறப்புரை நிகழ்த்தினார். அவரை அடுத்து, பாவேந்தர் படத்தினைத் திறந்து-வைத்து, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத் தூய தமிழ் அகராதித் தொகுப்பாசிரியர், செஞ் சொற் கதிரவன் ப.அருளி அவர்கள் சிறப்புரையாற்றினார். அதன் பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மாவீரன் பகத்சிங் படத்தைத் திறந்து வைத்து விடுதலை உணர்வுப் பேருரை நிகழ்த்தினார். இறுதியில் பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் நடைபெற்றன. அனைத்திற்கும் மூலவராய் இருந்து விழா நிகழ்வுகளைச் சிறப்புற நடத்திய பள்ளித் தலைமை யாசிரியர் மா.செ.தமிழ்மணி அவர்களின் நன்றியுரைக்குப் பின் இரவு 10-30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவுற்றன.

இறுதியில், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட மாணவ, மாணவி-யர், பெரியோர்கள், வெளியூர் அன்பர்கள் அனைவர்க்கும் இரவுச் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

○

பிறமொழித் தமிழ் ஒலிப்பு

—வெங்காலூர் : குணா—

இது 19—10—1991 அன்றைய தமிழ்மணியில் கே. வி. எசு. இலட்சுமணன் எழுதிய 'பெயர்கள் படும் பாடு' என்னும் கட்டுரையைப் பற்றியது.

சங்கத (சமற்கிருத) மொழியில் வரும் (ட, ண போன்ற) நாவொலிகளும் நுனிநா முன்பற்களைத் தொடுகையில் பிறக்கும் பல் அண்ண ஒலிகளும் 'ஆரியர்கள் வென்றடக்கிய திராவிடர்களின் மொழிக்குரியன'வென ஐசக் டெய்லர் குறிப்பிடுகின்றார். ("...the linguals and cerebro-dentals, which are so characteristic of Sanskrit, belonged to the tongue of the subjucated Dravidians, and have infected Aryan speech in India, but in no other land"—— Isaac Taylor, THE ORIGIN OF THE ARYANS, London, 1889,p 274) அந்தந்த இனங்களுக்கேற்ப சில தனி ஒலியமைப்புகள் உண்டென்பதைப் பல சான்றுகளுடன் அவர் நிறுவுகின்றார். இத்தகைய ஒலிப்பு ஏலாமைகளும் இயல்புகளுமே அவர்தம் எழுத்து இலக்கணங்களுக்கு அடிப்படை ஆயின.

ஆங்கிலத்தில் வரும் th என்னும் ஒலிப்பு, நீக்கிரோக்களுக்கு ஒலிக்கவே வராதாம். அவர்கள் th என்பதை d என மாற்றியே ஒலிப்பராம். அதே போன்று th என்னும் ஒலிப்பு, சுவிட்சர்லாந்து நாட்டவரால் z என மாற்றியே ஒலிக்கப்படும். Th என்னும் ஒலிப்பை உருசியர்கள் f என்றே ஒலிப்பர். இதனால் Theodore என்பது உருசியமொழியில் Feodore என்றாகும்.

சில ஒலிப்புகள் சில மொழியினருக்கு எளிதில் வராது. இந்த ஏலாமையை வைத்து இன்னார் பகை இனத்தாரென குறிப்பறியப் பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட நிகழ்வுகள் உலக வரலாற்றில் உண்டு.

உயிர் தப்பி வந்தவர்களில் இன்னார் பிரெஞ்சுக்காரரா இல்லையாவென்பதைக் கண்டறிய, சிசிலியின் மாலை வழிபாடு (Scicilian Vespers) முடிந்த ஓர் இரவில், ஒருவரின் கழுத்தில்

(26-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பன் உனக்கெவனும் இல்லை ! நீயே
எட்டப்பன் ! உனக்கெதிரி வெளியில் இல்லை !
குட்டப்பன் எல்லார்க்கும் குனிந்தால் உன்னைக்
கொண்டுசென்று போட்டிடுவர் கடலுள் ! சாவாய் !
நெட்டுக்கு நீவளர்ந்திங்(கு) ஆருக் கென்ன ?
நின்மொழிநின் இனவீழ்ச்சி வீழ்ச்சி தானே !
கட்டுக்குள் நீ வந்தின் றெழாமல் விட்டால்
கடிதழிவாய் ! கனன்றெழுக விடுத லைக்கே !

வாளை உருவி வைத்து ciciri என்னும் சொல்லைச் சொல்ல வைத்தனராம். பிரெஞ்சு மொழியினருக்குப் பொதுவாக ch ஒலிப்பு எளிதில் வராது. அதை அவர்கள் s என்றே ஒலிப்பர். இதனால் chichiri எனச் சொல்ல வராதவர்கள் அதனை sisiri எனச் சொல்ல நேர்ந்தால், அவர்கள் பிரெஞ்சுக்காரரேயென இனங்காணப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டனராம்.

கி. பி. 1250 முதல் 1517 வரையில் எகிப்தை ஆண்டுவந்த மாமேலுகர்கள் (Mamelukas) சையது அராபியர்களை (Arabs of Said) ஒழித்துக்கட்டினர். ஓர் அராபியரைக் கொல்வதற்கு முன்னால், இன்னார் அரா்பியர்தானுவென்பதை உறுதி செய்து கொள்ள, 'மாவு' எனப் பொருள்படும். dakik என்னும் சொல்லை சொல்லச் செய்தனராம். அதை dakik என்றோ dagig என்றோ சொன்னதை வைத்து இவர் அரபியர்தானென முடிவுகட்டினராம்.

கீலேயாத்தியர் (Gileadites) Shibboleth என்னும் சொல்லை அவ்வாறே ஒலித்தனராம். ஆனால் எப்பிராயிமரோ (Ephraimites) அதை Sibboleth என்றே சொல்லி வந்தனராம். அவ்வாறு sh என ஒலிக்க வராததை வைத்து இன்னார் எப்பிராமியர் எனக் குறிப்பறியப்பட்டு யோர்தானியத் துறைகளில் வெட்டிப் போடப் பட்டனர் என விவிலியம் (Judges 12 : 4—6). கூறுகின்றது.

பாலினேசியருக்கு மேரி (Mary) எனச் சொல்ல வராது. அதை அவர்கள் மேலி (Mali) என்றே சொல்லி வந்தனர். இங்கு ரகரம் லகரமாகின்றது. பனுரசு எனச் சொல்லவராத சீனர்கள், அதை Po-lo-nai என்றே சொல்லவும் எழுதவும் செய்தனர். பிரமன் என்னும் பெயரைச் சீனர்கள் Fan என்றுதான் சொல்லி வந்தனர். Christ எனச் சொல்லவராத சீனர்கள், Ki-li-see-tu என்றே சொல்வர்.

தென் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையில் வாழ்ந்து வந்த காஃபிரர்கள் (Caffres) gold எனச் சொல்வதில்லையாம். அவர்கள் அதனை igolide என்றும், sugar என்பதை isugile என்றும் சொல்லிவந்தனராம்.

இதே போல் b, g d போன்ற ஒலிப்புகள் உக்கிரியர்களுக்கு (Ugrians) சொல்ல வரா. அவற்றை அவர்கள் p, k, t என்றே ஒலிப்பர். மாத்யார் மொழியைப் பேசிவந்த செருமானியர்களுக்கு binder சொல்ல வராது. அதை அவர்கள் pinter என்றே சொல்வர். அதே போன்று beck என்பதை pek என்றும், blech என்பதை pleh என்றுமே சொல்வார்கள். இக்கால வெல்சு மொழியில் Benedic'tio என்னும் இலத்தீன் சொல்லை Benditt என்றும், Papi'lio என்னும் சொல்லை Pabell என்றும், Co'rpus என்னும் இலத்தீன் சொல்லை Corff என்றும் சொல்வர்.

sc, sm, sp, st போன்ற இரட்டை ஒலியன்களைப் பிரெஞ்சு மொழியினருக்கும் வேல்சு நாட்டவருக்கும் சொல்லவராது. உருது

மொழி பேசுவோரில் எளியோர் school என்பதை இசுக்கூல் என்பதைப் போன்றே, வேல்சு நாட்டவர் schola என்பதை yscol என்றும், spiritus என்பதை yspryd என்றும், scutum என்பதை ysgwd என்றும் சொல்வார்களாம்.

schola என்னும் இலத்தீன் சொல் பழைய பிரெஞ்சு மொழியில் escole என்றும், இக்கால பிரெஞ்சு மொழியில் e'cole என்றும் ஆகியுள்ளது. இதே போல் அம் மொழியில் Spiritus என்னும் இலத்தின் சொல் esprit ஆனது; sperere என்பது espe'rer ஆகியது; species என்ற சொல் espece ஆகியுள்ளது; இச் சொல் பின்னர் e'pice என்று திரிந்து, spade என்பது esep'e என்று திரிந்து இறுதியில் e'pe'c ஆனது. அதே போல், Scabellum என்னும் இலத்தீன் சொல், பிரெஞ்சில் escabeau என்றானது; Seale என்பது eschelle என்றாகி, e'chelle என்று திரிந்துள்ளது. இவ்வாறு திரிந்த இலத்தீன் சொற்களில் இன்னும் ஓரிரண்டு அடியில் தரப்படுகின்றன:

இலத்தீன்	தற்கால பிரெஞ்சு
Po'rticus	Porche
A' sinus	Ane
Septima'na	Semaine
Libera're	Livrer
Re'gula	Regle

கிரேக்க மொழியையும் இலத்தீனையும் வேரில் கொண்டு வளர்ந்த பிரெஞ்சு மொழிக்கே இந்த நிலையெனின், உயர்தனிச் செம்மொழியாகிய தமிழிலிருந்து போய் சங்கதம் (சமற்கிருதம்) ஆகி மீண்டும் தமிழுக்கே திரும்பப் பெற்ற சொற்களை மட்டும் தமிழில் மாறாமல் மருவாமல் அப்படியே ஒலிக்கவும் எழுதவும் வேண்டுமெனப் பாடம் படிப்பது, மொழி இயங்கியலுக்கும் மொழி மாந்தவியலுக்கும் புறம்பான வரட்டு வாயாடல் என்பதில் அய்யமில்லை. (பிராமணன் என எழுதுவதை விட்டு ப்ராஹ்மண என்றெழுதுவதைப் போன்று) சங்கதச் சொற்களை எல்லாம் தமிழில் அப்படியே சொல்லவும் எழுதவும் வேண்டுமென்பவர்கள், தமிழுக்கேயுரிய ழ, ற, ன, போன்ற சிறப்பு ஒலியன்களை எழுதவோ சொல்லவோ இயலாத சங்கதத்தில் அதே போல் தமிழ் ஒலிப்புகள் அப்படியே வர வேண்டுமென ஒரு பேச்சுக்குச் சொன்னால், சட்டியிலிருந்துத் தப்பி நெருப்பில் விழுந்த மீனைப் போல துடிப்பர் என்பது தெரிந்த கதைதானே? 'உனக்கு அல்ல அறிவுரை; அடியே, ஊருக்கு மட்டும் தானடி!' என்னும் போக்குத்தானே அவர்களின் அளவை? உலகிலுள்ள மொழிகளில் அடங்கிய எல்லா ஒலிப்புகளையும் உள்ளது உள்ளவாறே ஒலிக்கவும் எழுதவும் வல்ல ஒரு மொழி உலகில் எங்காவது உண்டா? சங்கதத்திற்காவது அந்தத் தகுதி உண்டா? பின்னர் தமிழுக்கு மட்டும் ஏன் இந்தப் பாடம்?

○

பேராசிரியை என்னிடம் கூறினர்கள்; குறிப்பாக ஆங்கிலம் உட்பட உலகப் பிற மொழிகளில் ஓரெழுத்து ஒரு மொழிகள் 10 அல்லது 12-க்கு மேல் கிடையாது என்றும், தமிழிலோ நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் உள்ளன என்றும் அறுதியிட்டுக் கூறியதை ஆங்கிலப் பேராசிரியை வியந்து பாராட்டினர்; உலகம், மண், பொத்தகம், அம்மா, பாதை என்பன போன்ற சொற்களின் பிறப்பு பற்றியும், அவ் வடிச் சொற்களிலிருந்து கிளைத்த பல்வேறு சொற்களையும் தாங்கள் விரித்துரைத்தது என்றும் நினைவில் நிற்கத்தக்கதாகும். மொழி என்பது வெறும் கருவி மட்டுமன்று; அறிவு நிலைப்பட்டது மட்டுமன்று. அஃது உணர்வு நிலையோடு ஒன்றிப் பிறந்தது என்ற (தாங்கள் கூறிய) கருத்து கூர்ந்து எண்ணிக் கொள்ளத்தக்கது. இக் கருத்து எம்மனோர்க்குப் புத்தம் புதுக் கருத்தாகும். இனநலத்திற்கு வள்ளுவ நெறிவழி புதுப் பொருள் கூறி விளக்கியதும் வியப்புக் குரியது. ஏறத்தாழ 1 மணி 15 நிமையங்கள் அமைந்த தங்களின் உரையினை ஒளியிழையில் பதிவு செய்து வைத்துள்ளேன். பேராசிரியர் நண்பர் ஒருவருக்கும் பதிவு செய்து கொடுத்துள்ளேன்.

தங்களின் தூய்மையான தந்நலங்கருதாத பெருமைப்பின் அருமை பெருமைகளை நம்மினத்தார் (படித்தவர்களாவது) என்றைக்கு முழுமையாக உணரப் போகிறார்களோ? தங்களின் தமிழ்ப் பணிக்கு என்னாலியன்ற அனைத்தும் செய்ய முனைப்போடு காத்திருக்கிறேன். என்னையும் தங்கள் இயக்கத்தில் ஒருவனாகத் தாங்கள் கருத வேண்டுகிறேன். புலிகளைத் தடை செய்துள்ள இவ்வேளையிலாவது நம்மினத்தார் விழித்துக் கொள்ள மாட்டார்களா என்று ஏங்குகிறேன். அன்பன் —தா. மணி. விரிவுரையாளர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.

O: 1495: பாசத்திற்குரிய பெருந்தகையீர்! பைந்தமிழ் நெஞ்சத்தீர்! பணிவுகலந்த வணக்கம். தென்மொழி சுவடி: 26: ஓலை:6, மேழம்[ஏப்ரல்] இதழ் கண்டேன்; காத்து வைக்க வேண்டிய கருவூலமாம் 'தென்மொழி' இதழில் களிப்பூட்டும் செய்தி ஒன்றும் கண்டேன். சிந்தை மகிழ்ந்தேன். ஆம்! அறுபதாம் பிறந்த நன்னாள்! அகம் உவகை கொள்கிறது. மணிவிழா காண்கின்ற மதிப்புயர் பெருநாள் இது. போற்றுதலுக்கும் புகழுக்கும் உரிய "தமிழ் நில"த்தில் பிறந்து, ஏற்றமிகு இன்றமிழாம் "தென்மொழி"யைக் கொண்டு, மாற்றமில்லாத் தமிழ் நெறியை மனதில் பதித்து, ஆற்றலுயர் அறிஞராகி, அயராது தொண்டும் ஆற்றி வளர்ந்து வரும் வாடாத தூய தமிழே, தமிழினத்தை உரிமையோடு தட்டி வளர்த்து வரும் தமிழ் நெஞ்சே! வாழ்க பல்லாண்டு! எல்லா நாளும் தங்களுக்கு ஒன்றுதான்! எனினும் தங்களால் வளர்க்கப் பெற்ற எத்துணையோ தமிழ் நெஞ்சங்களுக்கு இதுவொரு மகிழ்ச்சிக்குரிய நன்னாள். இந்த நன்னாளும் கூட நமது தமிழ் மொழி, இனம், நாடு மூன்றும் முழு உரிமை பெற்ற தனித்தியங்கும் வல்லமை பெற்றதாக என்று மாறுகிறதோ அன்றுதான் என்பதும் தாங்கள் உணர்ந்ததே, மிக விரைவில் திருக்குறள் (தமிழ்) மெய்ப்பொருளுரையையும் எழுதி முடிக்க பணிவுடன் வேண்டுகிறேன். எடுத்துக் காட்டு ஒன்றிரண்டை யாகிலும் தென்மொழியில் வெளியிடலாமே! பிறபின், அன்பின் இனிய,

—சி. கைலாசம் ஈரோடு-7

O: 14:96: பேரன்பிற்குரிய 'தென்மொழி' ஆசிரியர் பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கட்கு. புலவர் ந. இராமநாதன் வணக்கம் கூறி வரைவது. தங்கள் நலம் காணும் அவாவுடையேன். தாங்கள் அன்புடன் உய்த்துதவிய 'தென்மொழி' இதழ்கள் நான்கையும் பெற்றுக் கொண்டேன். இதழ்களை உற்று நோக்கி உங்களுடை பாடல்கள் பலவற்றைப் பாடிக் கொண்டே படித்துப்

பார்த்தேன்; இரண்டு பாடல்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன; தம்பி—பிரபாகரன் பற்றிய பாடலும் 'இட்ட சாவம் முட்டுக' என்னும் பாடலும் மிகுதியாகப் பிடித்தன. நீங்கள் தூய உள்ளத்தோடு இட்ட சாவம் அப்படியே பலித்தது போல நடை முறைகள் ஒத்து இலக்கியதைக் கண்ட என்னுள்ளம் மிக்க மகிழ்ந்தது; 'கதிர்க்கையனும் பிரபாகரனை' அறிமுகப் படுத்தும் பாடல் சிறப்பிற்குரியது. ஆயினும் அவ்விரு பாடல்களில் வந்துள்ள 'சிவன் திருமால்' ஆட்சியும் 'அரக்க' ஆட்சியும் என்னுள்ளத்தை வருத்தின. தனித் தன்மையோடு விளங்கும் உங்கள் பாக்களின் கருப் பொருள் அவ்வளவும் வாழ விரும்பும் தமிழ் மக்கள் யாவருக்கும் மருந்தென அமைந்து, தமிழ் மக்களின் உள்ளங்களின் ஆழத்தே பதிந்து, பெரும் பயன் விளைக்கும் காலம் சேய்மையில் இல்லை. அஃது அண்மையில் வர இருக்கின்ற அடிமை இருள் விலகிய உரிமையொளி மிக்க ஒரு நல்ல காலத்துக்கான விடிவெள்ளியாகக் காணுகின்றேன். வணக்கம்.

புலவர். —ந. இராமநாதன்
முதல்வர் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன
அஞ்சல் வழிக் கல்லூரி, பெரியார்திடல், சென்னை-600 007

○: 1497: பாவாணர் நெறித்தோன்றல் பாவலரேறு அவர்களுக்கு, பாட்டாளி இடிமுரசின் வணக்கங்கள் பலகோடி! 'தென்மொழி' (ஏப்ரல் 92) மேழம் இதழின் முகப்பில் வெளியான ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே! என்ற தலைப்புக் கொண்ட பாடல் வரிகள் ஒவ்வொன்றும் உண்மையை வெளிப்படுத்தும் வயிரவரிகள். அறநெறியில் தோய்ந்த நன்மதிசேர் கருத்துகள் அறிவோங்கி மணக்கிறது. ஆசிரியவுரைக் கட்டுரையில்! பேராற்றல் மிக்க பாவேந்து, பெருஞ்சித்திரனாரின் தமிழ்ப்பணி வெல்க! வாழ்க!

—புலவர். தமிழறிவன், சென்னை-14

: 1498: பெருந்தகை ஐயன்மீர், வணக்கம்! நலம் பெற்று நீடூழி வாழ, தங்களுக்கு இறையருள் கூடுமாக! தங்களைப் புதுக்கோட்டை நகர்மன்றப் பேச்சின் போது கண்டு பேசினேன்; தங்களிடம் அறிய வேண்டுவவற்றை அக்கால் தங்களிடம் கேட்க முடியவில்லை. நேரில் வந்து காணவும் இயலவில்லை. நீண்ட நாள்களாகத் தாங்கள் எழுதிவரும் திருக்குறள் மெய் விளக்கவுரை எதுவரை வந்துள்ளது? அச்சுக்கு எதுவரை சென்றுள்ளது? மற்றபடி...,

பாவாணர் அகர முதலியை ஏமாற்றிவிட்டார்; துணைப் பதிவாளராயிருந்த மதிவாணனார், தங்கள் பெயரையும் அதில் ஏற்றுது இருட்டடிப்புச் செய்து விட்டார். தங்களிடம் முன்னர் யான் உரையாடியபோது, "திருக்குறள் மெய்ப்பொருளுரையை யான் செய்ய வேண்டுமானால், 'ரு' ஆண்டுகள் பிற பணி தொடாது முயன்றால் செய்ய முடியும்" என்றீர்கள். தாங்கள் முயன்றிருந்தால் இது காறும் ஓர் ஆக்கப்பணி நிறைவுற்றிருக்கும். நிற்க;

அரசு. அ.மு. பணியைப் பாவாணர்க்கு அளிக்கும் முன் தாமே செய்தார்; அக்கால் ஏமாற்றாமல் செய்திருப்பார். அஃதென்னவாயிற்று? மற்றபடி தங்களிடம் நான் வேண்டி வேண்டி இரந்து கேட்பது, 1. தொல்காப்பியம் போல், முத்தமிழ்க்கும் ஒரு பேரிலக்கணம் செய்வது (தொல்காப்பியம் முத்தமிழிலக்கணம் அன்றேனும் அமைப்பில்) 2. இராமாயணம் போன்றும், மணிமேகலை (மெய்ம்மப் பகுதி) போன்றும் ஒப்பற்ற இலக்கியம் செய்வது. இப்பணிகளைச் செய்யத் தகுதி வாய்ந்த ஒரே ஒருவ-

(தொடர்ச்சி உள்ளே 16-ஆம் பக்கம்)